Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ். நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சு வேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 தை 20 ஹிஜ்ரி 1427 முஹர்ரம் 03 (02.02.2006) வியாழக்கிழமை இதழ் 125

# ஜெனீவா பேச்சுக்கு அச்சுறுத்தல்!

## கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹொக்லன்ட் எச்சரிக்கை



கொழும்பு —

**தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் வெலிக்கந்த பகுதியில் வைத்து கடத்தப்பட்ட சம்பவம் - ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு எச்சரித்துள்ளது.**

**இந்தச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் ரொய்ட்டருக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

**அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில் -**

இந்தச் சம்பவம் மிகவும் வருந்தத்தக்கது. இந்தச் சம்பவத்தால் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்கள் பாதிப்படையக்கூடும்.

இந்த விடயம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு எவரும் தகவல் தரவில்லை. நேற்றுமுன்தினம் காலைதான் எமக்கு தகவல் கிடைத்தது.

திங்களன்று நடைபெற்ற மற்றைய சம்பவம் குறித்து நாம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். இந்தச் சம்பவத்தில் மீண்டு வந்தவர்களுடன் எமது கண்காணிப்பாளர்கள் சம்பவ இடத்துக்கு நேற்று நேரில் சென்றுள்ளனர். அவர்கள் எமது அலுவலகத்துக்குத் திரும்பி வந்தவுடன் நிலைமைகள் புரியும்.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக - தமது பொலிஸ் நிலையங்கள், கள இராணுவத் தளபதிகள், இராணுவ சோதனைச்சாவடிகள் என்பவற்றில் விசாரித்தபோதும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லையென அரசாங்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டோரை உடன் விடுவிக்க ஐ.நா.கோரிக்கை!

கொழும்பு —

கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கொழும்பிலுள்ள ஐ.நா. மனிதாபிமான ஒருங்கிணைப்புச் செயலகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்த அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் -

மனிதாபிமான உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இலங்கை அரசில் பதிவு செய்யப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்டோரில் இருவர் விடுவிப்பு!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வெலிக்கந்தவில் வைத்து ஆயுதக்குழுவினரால் கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்கள் பத்துப் பேரில் இரண்டு பெண்கள் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் சீசர் கருத்துத் தெரிவிக்கையில் -

எமது பணியாளர்களின் கண்களைக்கட்டி கொடூரமாக துன்புறுத்தப்பட்ட நிலையில் ஆயுதக் குழுவினர் கடத்திச் சென்றனர்.

அவர்களில் 2 பெண்கள் திங்கட்கிழமை மாலை விடுவிக்கப்பட்டனர். இருவரும் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மிகவும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். மிகுந்த பயத்துடன் எவரையும் சந்திக்க மறுக்கும் மனநிலையில் உள்ளனர். ஊடகவியலாளர்களிடம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி கட்சியில் பிளவு; விலகினார் விக்னேஸ்வரன்

கொழும்பு —

டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசகரும், ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி விக்னேஸ்வரன் கட்சியிலிருந்து வெளியேறியுள்ளார். இவர் 10 வருடங்களுக்கு மேலாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதான ஆலோசகராகவும், ஈ.பி.டி.பி கட்சியின் பேச்சாளராகவும் இருந்ததுடன் கட்சியின் யாப்பையும் தயாரித்தவராவார். இவரது பதவி விலகலானது டக்ளஸ் தேவானந்தாவுக்கு பாரிய இழப்பாக இருக்குமென கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ.பி.டி.பி கட்சியிலிருந்து கருத்து வேறுபாடு காரணமாகவே தான் விலகியதாக உறுதிப்படுத்திய விக்னேஸ்வரன்- டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து தன்னால் பணியாற்ற முடியாது எனவும், ஈ.பி.டி.பி கட்சியில் ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமற்றுப் போயுள்ளதாகவும் தெரிவித்தார்.

தான் ஈ.பி.டி.பியிலிருந்து வெளியேறியபோதும் அரசியலில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். இவரது இந்த முடிவால் கட்சியில் பாரிய பிளவு ஏற்படுமென கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. 1994 ஆம் ஆண்டு முதல் டக்ளஸ் தேவானந்தாவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஈ.பி.டி.பியிலிருந்து 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலகியுள்ளனர்.

## படுகொலைகள், கடத்தல்களை

### படுகொலைகள், கடத்தல்களை கண்டித்து

# தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றில் வெளிநடப்பு!

கொழும்பு —

தமிழ்ப் பொதுமக்கள் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்படுவது மற்றும் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படுவது, வடக்கு - கிழக்கில் அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவம் ஆகியவற்றைக் கண்டித்து -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வெளிநடப்புச் செய்தனர்.

நேற்று நாடாளுமன்றம் கூடிய போதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டனர். இவர்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகியன ஆதரவளித்தன.

அதே வேளை - நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியான எதிர்ப்பு நடவடிக்கையில் இன்று முதல் ஈடுபடுவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முடிவு செ[illegible]ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா சபையில் அறிவித்தார்.

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்க அரசு அவசர நடவடிக்கை எடுக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



சீன புத்தாண்டை முன்னிட்டு தலைநகர் பீஜிங்கில் உள்ள கோயில் ஒன்றில் நடைபெற்ற திருவிழாவில் சிறுமி ஒருவர் மூக்கு வழியாக பாம்பு ஒன்றை நுழைத்து அதனை வாய்வழியாக எடுக்கிறார்.

## இலங்கைக்கு உதவி வழங்க ஜெயலலிதா கடும் எதிர்ப்பு!



சென்னை —

இலங்கைக்கு அவசர மருத்துவ உதவிகள் தேவையானால் வழங்கலாம். ஆனால் அதற்கு மேல் உதவக்கூடாது என தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஊடகவியலாளர்களிடம் நேற்று அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழகத்துக்கு இலங்கை அகதிகள் வருவது எமக்கு 1983 ஆம் ஆண்டு நிலைமையை நினைவுபடுத்துகிறது. அப்போது பெருந்தொகையானோர் அகதிகளாக வந்தனர்.

அது போல் இப்பொழுது நாளாந்தம் மேலும் மேலும் அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

அகதிகள் வருகை மூலம் அங்கே அவர்கள் வாழ்வதற்கு ஏதுவான சூழ்நிலை இல்லை என்று தெரிகிறது. இது ஆரோக்கியமானது அல்ல.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வெலிக்கந்த கடத்தல் புனையப்பட்ட செய்தி!

### என்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

கொழும்பு —

வெலிக்கந்தவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் முற்றிலும் திரிபுபடுத்தப்பட்ட ஒரு விடயம் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பி.பி.சி சிங்கள சேவைக்கு நேற்றிரவு பேட்டியளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தச் சம்பவத்தில் படையினருக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும் எங்களுக்குத் தெரியும். இது குறித்து ஜனாதிபதி(12 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் மீதான இராணுவ கெடுபிடிகள் மீண்டும் போர்ச் சூழலை ஏற்படுத்தும்!

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம் —

தமிழ்மக்கள்மீது இராணுவத்தினர் நடத்திவரும் சோதனைக் கெடுபிடிகள், சுற்றிவளைப்புகள், தேடுதல்கள் சமாதான முயற்சிகளை சீர்குலைத்து மீண்டும் போரை ஏற்படுத்தும் செயலாகவே கருதமுடிகிறது என, தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்மக்களை பயமுறுத்தும் வகையில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒருபுறம் சமாதானம் என்று அரசு கூறிக்கொண்டிருக்க - மறுபுறம் சமாதானச் செயற்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் இராணுவத்தினர் மக்கள்மீது மேற்கொண்டுவரும் வன்முறைகளைக் கண்டிப்பதுடன், மக்கள் மீதான துன்புறுத்தல்களை இராணுவம் நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு நீதியானதும், நிரந்தரமானதுமான தீர்வை ஏற்படுத்துவதற்காக சமாதானப் பேச்சுக்கான இடம் இணக்கம் காணப்பட்ட நிலையிலும், இராணுவம் தனது அராஜகத்தை அரங்கேற்றி வருவது தமிழ்மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைகள் சமாதானத்தின்மீது நம்பிக்கையை இழக்கச்செய்கிறது.

நேற்றுமுன்தினம் கண்டி வீதியில் பயணம்செய்த மக்கள்மீது இராணுவத்தினர் பல கெடுபிடிகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை ஊர்காவற்துறையில் பல்கலைக்கழக மாணவர் இருவர் கைதுசெய்யப்பட்டமை மக்கள் மீதான அடக்குமுறைகளை இராணுவத்தினர் குறைக்கப்போவதில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

இராணுவத்தினரின் அராஜகங்கள் மீண்டும் ஒரு போரை ஏற்படுத்துவதற்கான செயற்பாடாகவே நாம் கருதுகிறோம். இவ்வாறான இராணுவ கெடுபிடிகள் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு உகந்த சூழலை ஏற்படுத்தப்போவதில்லை.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த இராணுவ வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு ஓர் இயல்பு நிலையை ஏற்படுத்துவதன் மூலமே சமாதானம் மீதான நம்பிக்கையை உருவாக்க இயலும் என்பது வெளிப்படையான உண்மையாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு சர்வதேச அமைப்புகள் முன்வரவேண்டும்!

## விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் இயல்புநிலை ஏற்படுத்தப்பட்டு பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்விச்செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு சர்வதேச அமைப்புகள் உதவ வேண்டும் என - யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குடாநாட்டில் மாணவர் மீதான இராணுவ கெடுபிடிகளால் தாம் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாது இருப்பது குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பொதுமக்கள், மாணவர்களுக்கு எதிரான வன்முறையை உடனடியாக அரசதரப்பு நிறுத்தி யாழ்.குடாநாட்டில் அனைவரும் சுதந்திரமாக, பாதுகாப்புடன் நடமாடத்தக்க வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தி செயற்படுத்தவேண்டும் என - யாழ்.பல் கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்தது.

எனவே, யாழ்.குடாநாட்டில் இயல்புநிலையை ஏற்படுத்துவதற்குரிய அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு பல்கலைக்கழக கல்வியைத்தொடர ஆவனசெய்யுமாறு -

அரசையும், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி, அனைத்துலக மனித உரிமைகள் ஆணைக்குழு, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் சர்வதேச அமைப்புகள் என்பவற்றைக் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் உரிய முறைப்படி நடைமுறைப் படுத்தப்படும்போதுதான் நாம் கல்விச் செயற்பாட்டை ஆரம்பிக்க முடியும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மனைவியை கொலைசெய்ய முயன்ற நபருக்கு இரண்டுவருட கடூழியச்சிறை

## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு

யாழ்ப்பாணம் —

மனைவியைக் கழுத்து நெரித்துக் கொலைசெய்ய முயற்சிசெய்த நபருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனையுடன், மனைவிக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் யாழ். மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கரணவாய் வடக்கைச்சேர்ந்த கனகாம்பிகை என்ற தனது மனைவியை கழுத்தைத் திருகிக் கொலை செய்ய முயற்சித்ததாக அவரது கணவர் சுப்பையா தியாகராஜா என்பவருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி சொ.தியாகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், மனைவி கனகாம்பிகைக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக யூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும் என்றும் - அத்துடன் அவ்வாறு செலுத்தத் தவறினால் 2 1/2 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 3 பிணையாளிகளின் பிணையிலேயே செல்லமுடியும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பண்டிதர் வகுப்பு

யாழ்ப்பாணம் —

சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்டுவந்த சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர், பண்டிதர் தேர்வுகளுக்குரிய வகுப்புகள் நாளை மறுதினம் மு.ப 9 மணிமுதல் யாழ்.நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் தெரிவித்தது.

# இயல்பு நிலையை ஏற்படுத்த இராணுவம் முன்வரவேண்டும்

## உயர்கல்வி மாணவர் அமையம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

மக்கள்மீது மேற்கொண்டுவரும் கெடுபிடிகள் நிறுத்தப்பட்டு இயல்பான சூழலை உருவாக்க இராணுவத்தினர் முன்வரவேண்டும் என - யாழ். மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுத்தினர் மக்கள்மீது மேற்கொண்டுவரும் கெடுபிடிகளை நிறுத்துமாறுகோரி வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கான ஒரு சந்தர்ப்பத்தை அரசுக்கு வழங்கி அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளைக் காட்டி சமாதானத்தின்மீது அக்கறையுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் இராணுவம் தமிழ் மக்கள்மீது வன்முறைகளைத் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

கண்டி வீதியால் பயணம் செய்யும் அப்பாவி மக்கள்மீது பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துதல், கடந்த சனிக்கிழமை பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டமை போன்ற நிகழ்வுகள் சமாதானம் மீது எமது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை சீர்குலைப்பதாக அமைகின்றன.

அதாவது, சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திய பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் மிலேச்சத்தனமான இத்தகைய செயற்பாடுகள் எமது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையே ஏற்படுத்தியுள்ளன.

எனவே, மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகளை உடனடியாக நிறுத்தி ஓர் இயல்பான சூழலை உருவாக்க இராணுவத்தினர் முன்வர வேண்டும்.

சமாதானத்தில் அக்கறையுள்ளவராக ஜனாதிபதி கூறிக்கொண்டிக்கும் போது இராணுவம் தமது வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

எனவே, இராணுவத்தினரின் அராஜகங்களை நிறுத்தி உண்மையான, உறுதியான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### வீடு வாடகைக்கு

பொஸ்கோ கல்லூரிக்கு அண்மையாக யாழ்.கோவில் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு - 077 3126902, 077 3221413.

(சி.5060)

கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம் - கரவெட்டி
வரையறுக்கப்பட்டது பதிவு இல 1553

**பதவி வெற்றிடம்**

**கிளைமுகாமையாளர் - தற்காலிகம் - 5 வெற்றிடம்**

*மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. சம்பளம் ஆணைக்குழு விதிகளுக்கமைவாக வழங்கப்படும். கூட்டுறவு அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சேவைத் திறமை, தகுதி, அனுபவம் என்பன அடிப்படையில் கால கெதியில் நிரந்தர நியமனம் வழங்கப்படும். விண்ணப்பங்களை 15.02.2006ம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் சங்கக் காரியாலயத்தில் நேரடியாகவோ, தபால் மூலமோ ஒப்படைக்கலாம். மேலதிக விபரங்களுக்கு சங்க வேலை நேரத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்கள் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் தயாரித்து வழங்க வேண்டும்.*

C/5061 பொது முகாமையாளர்

யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
பிரெஞ்சு மொழி வகுப்புகள்

புதிய பிரிவு

- கல்லூரி மாணவருக்கான, வேலை செய்வோருக்கான, மொழி பயிலும் ஆர்வமுள்ளோருக்கான தொடக்கநிலை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- இத்திட்டம் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் உதவியுடன் நடைபெறுகிறது.
- ஒருவருடத்தில் சர்வதேச தரத்திலான பிரெஞ்சுமொழி பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

பதிவுசெய்தலுக்கு நேரில் வரவும் அல்லது தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road, Kantharmadam, Jaffna.
Phone : 021 - 222 8093 [2180]

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த
பரமசிவன்
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.

காட்சிகள்;- 10.30, 2.30 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய், திரிஷா (வருகிறான் வரிப்புலி நாதியாய்) மற்றும் பலர் நடிப்பில்
ஆதி
தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

சிம்பு ஜோதிகா பிரகாஸ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: கே.எஸ்.ரவிக்குமார்.
காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும்.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ் இருவேடம், சங்கவி, மற்றும் பலர் நடித்த
அய்யர் I.P.S
காட்சிகள் 11.00, 2.30, 5.30 (பு.நே)

வெளிவந்துவிட்டது
விஜய வருச 2006 - 07
திருக்கணித பஞ்சாங்கம்
விலை ரூ 120/=
கடந்த காலங்களில் விரதாதிகள் சாஸ்திர ரீதியில் வெளியிட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றது திருக்கணித பஞ்சாங்கம் என்பதை மறவாதீர்கள்.
எங்கும் கிடைக்கும்
வெளியீடு : திருக்கணித நிலையம், மட்டுவில் சாவகச்சேரி.
[C/5064]

SAAMSTECH
புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. ஆங்கிலம்
பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், அலுவலர்கள், இளைஞர்கள் மற்றும் வீட்டுப்பெண்களுக்கானது. காலம் :- 3 மாதங்கள்
கிழமை மற்றும் வார இறுதி காலை, மாலை வகுப்புக்கள்.

2. சிங்களம்
அன்றாட வசனங்களைக்கொண்டு முழுமையாக கதைப்பதற்கான பாடநெறி. காலம் :- 2 மாதங்கள்

3. Web Technology
இணையதள வடிவமைப்புக்கான பயிற்சிநெறி

கட்டணம் ரூபா 3000/- (2182)

சிறப்புச்சலுகை
இன்று பதிவுசெய்வோருக்கு 4000/- இற்கான ஆங்கில, சிங்கள, புத்தகங்கள் இலவசம்

SAAMSTECH
233/4, Kasthuriar Road, Jaffna

# ஜெனிவா சமாதான பேச்சுக்களில் வெளிநாட்டு ஆலோசகர் இல்லை

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு—

ஜெனிவாவில் விடுதலைப் புலிகளுடன் நடைபெறும் யுத்த நிறுத்த அமுலாக்கப் பேச்சுகளில் வெளிநாட்டு ஆலோசகர்கள் இடம்பெறமாட்டார்கள் என - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜெனிவாவில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்ற அறிவிப்புக்குப் பின்னர் முதல் முறையாக ஏ.எப்.பி டர்ஸ் செய்தி ஸ்தாபனத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அளித்த பேட்டியொன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எமக்கு இப்போது தேவை வன்முறைகளை நிறுத்துவது என்பதுதான். வன்முறைகள் நிறுத்தப் பட்டுவிட்டால் அடுத்த கட்ட அமைதிப்பேச்சுக்கள் நடைபெறும். ஒவ்வொருபடி நிலையாக இது நடைபெறும்.

அமைதியான சூழ்நிலையைத் தான் நாம் விரும்புகிறோம். குறிப்பாக வடக்கு - கிழக்கில் இந்த அமைதியான சூழ்நிலை நிலவவேண்டும். வடக்கு - கிழக்கில் எதுவித படுகொலைகளும் நடைபெறாவிட்டால், நாம் அபிவிருத்திப் பணிகளில் கவனம் செலுத்த முடியும். மக்களும் நல்ல சூழலில் வாழமுடியும்.

ஜெனிவா பேச்சுக்களுக்கான அரசாங்கக்குழு இன்னமும் முடிவு செய்யப் படவில்லை. இதற்கு முன்னர் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுக்களில் வெளிநாட்டு ஆலோசகர்கள் கலந்து கொண்டதில்லை. அதைப்போல் ஜெனிவா பேச்சுக்களிலும் வெளிநாட்டு ஆலோசகர்கள் பங்கேற்கமாட்டார்கள்.

எமது தற்போதைய அடுத்த நகர்வு பேச்சுக்களுக்கான நாளைத் தெரிவு செய்வது என்பது தான். இந்தமாத மத்திக்கும், இறுதிக்கும் இடைப்பட்ட நாட்களில் பேச்சுக்கள் நடைபெறலாம்.

அவர்கள் யுத்த நிறுத்தம் தொடர்பாக விவாதிப்பார்கள். முதல் கட்டப் பேச்சுகள் அதைப் பற்றியதாக மட்டும் இருக்கும். அதையடுத்து அடுத்த கட்டப் பேச்சுக்கள் தொடர் பாக முடிவு செய்யப்படும்.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுகாண காலவரையறை எதுவும் தீர்மானிக்கப்படவில்லை. அவர்கள் பேச்சுக்களுக்கு வருகிறார்கள். அவர்கள் அணுகுமுறையை நாங்கள் பார்ப்போம். அர்த்தமுள்ள அணுகுமுறையை எதிர்பார்க்கிறோம். என்னை கடும் போக்காளர் என்று சொல்பவர்கள் என்னைப் பற்றி எதுவும் தெரியாதவர்களே.

நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்பில் ஜே.வி.பிக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் எம்மோடு மாறுபட்ட நிலைப்பாடுகள் இருந்த போதும் அவர்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தவில்லை. இனப்பிரச்சினை தொடர்பான ஒவ்வொரு நகர்வும் அவர்களுக்கும் தெரியப்படுத்தப்படும். அவர்கள் அமைதியை ஆதரிக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# லிப்டன் சதுக்கமாகிறது இலங்கை நாடாளுமன்றம்

## பிரதமர் ரட்ணசிறி குற்றச்சாட்டு

கொழும்பு —



நாடாளுமன்றத்தை சில உறுப்பினர்கள் லிப்டன் சதுக்கம்போல ஆர்ப்பாட்டக் களமாக மாற்றி வருகின்றனர் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க -

இத்தகைய செயற்பாடுகள் வருத்தமளிக்கின்றன. பிரச்சினைக்குப் பேசித் தீர்வு காணலாம்.

கடந்த ஓகஸ்ட் மாத நாடாளுமன்ற அமர்வு முழுமையும் லிப்டன் சதுக்கம்போல் ஆர்ப்பாட்டங்களே நடத்தப்பட்டன.

ஜனநாயகத்தின் உயரிய விழுமியம் கொண்ட நாடாளுமன்றத்தின் மதிப்பை சில உறுப்பினர்கள் குறைத்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# லஞ்சம் வாங்கிய இருவர் கைது

கொழும்பு—

குடிவரவு மற்றும் குடியகல்வு துறையின் 2 ஊழியர்கள் லஞ்சம் வாங்கியதாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரிய ஆவணங்கள் இல்லாமல் கடவுச் சீட்டுதயாரிக்க ரூபா 15 ஆயிரம் லஞ்சம் பெற்றதாக அந்தத் துறையின் கம்பஹாவைச் சேர்ந்த சோமசிறி ஜயலத் மற்றும் வெலகமகெ ஜோசப் பெரேரா ஆகியோர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு துறையின் சிற்றூழியர்களாக பணியாற்றும் இருவரும் ஆவணங்கள் இல்லாமல் கடவுச் சீட்டை வழங்க 30 ஆயிரம் ரூபா லஞ்சம் கேட்டுள்ளனர். அதன்படி முன்தொகையாக ரூபா 15 ஆயிரம் பெற்றபோது லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினரால் இருவரும் கைதுசெய்யப் பட்டனர்.

# மரண தண்டனைக் கைதிகள் மேன் முறையீட்டு மனு!


கொழும்பு—

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த சரத் அம்பேபிட்டிய படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 5 பேரும் தம்மை விடுதலை செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

முஹமட் நியாஸ் நௌபர் என்ற பொட்டு நௌபர், நிசாந்த உதய குமார, சம்பத்துசார விஜயவர்த் தன அபயவிக்கிரம, சுஜித் ரோஹண ரூபசிங்க, சுமேத நிரோஜன் ஆகிய 5 பேரும் கொழும்பு மேல் நீதி மன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு மனுவைத் தாக் கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் குழு - சட்டத்தையும், நீதியையும் தவறாகப் பிரயோகித்துள்ளன என்ற குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்றும் தங்கள் மனுவில் தெரிவித்தனர். இந்த மனு மீதான விசாரணை மார்ச் 24 ஆம்திகதி நடைபெறும்.

# ஐ.தே.க உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைவு





கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மேலும் பல உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்தனர்.

பிரதேசசபை மற்றும் பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த ஒரு தொகுதி உறுப்பினர்களே இவ்வாறு இணைந்து கொண்டவர்களாவர்.

இவர்களுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கான அட்டைகளை நேற்று முன்தினம் அலரிமாளிகைளில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

நாவலப்பிட்டிய நகரசபை உறுப்பினர் தஜிமுதீன், பஸ்பகே கோறள பிரதேச சபை உறுப்பினர் தம்மிக்க கருணாரட்ண, அதே பிரதேசசபை உறுப்பினர் முரளிதரன், உடவத்த பிரதேசசபை உறுப்பினர் ஜஸ்ரின் குணவர்த்தன, உடவத்த பிரதேச சபை பிரதித் தலைவர் கீர்த்தி ரட்ணாயக்க மற்றும் தம்பன பிரதேச சபை உறுப்பினர் தர்மரட்ண உள்ளிட்டோரே ஆளும் கட்சியில் இணைந்து கொண்டவர்களாவர்.

இந்த உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்வில் - பிரதி அமைச்சர் மகிந்த அழுத்கமகே கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு தயாராகும் அரசியல் கட்சிகள்

கொழும்பு—

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலுக்கு வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் திகதி தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டதையடுத்து தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகள் தற்போது தயாராகி வருகின்றன.

வேட்புமனுக்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

18 மாநகர சபைகள், 42 நகர சபைகள் மற்றும் 270 பிரதேச சபைகள் என மொத்தம் 330 உள்ளூராட்சி சபைகளுக்கு 2004 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் கீழ் தேர்தல் நடைபெறவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன கடந்த பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டது போல், ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்திவருவதாக அந்தக் கட்சிகளுடன் தொடர்புடைய தகவல்கள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகம் உட்பட சிறுபான்மைக் கட்சிகளைப் பொறுத்தவரை இது தொடர்பான பேச்சுவார்த்தைகளிலும், சந்திப்புகளிலும் தற்போது ஈடுபட்டு வருகின்றன.

மலையகத்தின் பிரதான கட்சிகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் சந்தித்துக் கூட்டாகப் போட்டியிடுவது பற்றி பேச்சு நடத்தினர்.

கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் மேலக மக்கள் முன்னனி தனித்து போட்டியிட இருப்பதாக அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான பிரபா கணேசன் தெரிவித்தார்.

மலையகத்தில் இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி தவிர்த்த ஏனைய மலையகக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து தற்போது பேச்சுவார்தைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.


சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தவரை அனைத்து இடங்களிலும் தனித்து போட்டியிடுவதற்கே விரும்புகின்றது. ஆனால், சில கட்சிகளிடமிருந்து பேசுவதற்கு அழைப்புகள் கிடைத்துள்ளது என்று அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இருப்பினும் வடக்கு - கிழக்கில் தனித்து போட்டியிடுவது எனும் முடிவில் மாற்றமில்லை என்றும் வட - கிழக்கிற்கு வெளியே சிறுபான்மைக் கட்சிகள் என்ற ரீதியில் இ.தொ.க. வுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் வடக்கு - கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் ஈ.பி.டி.பி தனித்துப் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



5 நாள் விஜயமாக கொழும்பு வந்துள்ள இந்திய விமானப்படைத்தளபதி எயர் சீப்மார்ஷல் சுசீந்திரபால் தியாகி நேற்று முன்தினம் இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, கூட்டுப்படைத் தளபதி அட்மிரல் தயாசந்தகிரி, கடற்படைத்தளபதி வைஸ்அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோரைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

# இந்திய அணியைத் தோற்கடித்து தொடரை வென்றது பாகிஸ்தான்!



கராச்சி —

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான டெஸ்டில் 341 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்று தொடரை 1:0 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி கைப்பற்றியது.


நேற்றுமுன்தினம் மூன்றாவது நாள் ஆட்டநேரமுடிவில் பாகிஸ்தான் அணி 2ஆவது இனிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 511 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இக்பால் 103 ஓட்டங்களுடனும், அப்துல் ரசாக் 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடைபெற்றது. இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் ரசாக் அரைச்சதம் அடித்தார். இது அவருடைய ஆறாவது அரைச்சதமாகும். அரைச்சதம் அடித்தவுடன் ரசாக் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார்.

அவர் கும்ளே வீசிய பந்துகளை பவுண்டரிக்கும், சிக்ஸருக்கும் விளாசினார். அவருக்குத் துணையாக இக்பாலும் அடித்து ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார். இருவரது ஆட்டத்திலும் அனல் பறந்தது.

டெண்டுல்கர் வீசிய ஒரு ஓவரில் இக்பால் தொடர்ந்து இரண்டு பவுண்டரிகள் மற்றும் ஒரு இமாலய சிக்ஸர் அடித்தார். இதனால் பாகிஸ்தான் அணியின் ஓட்டக் குவிப்பு வேகம் அதிகரித்தது.

சிறப்பாக ஆடிய இக்பால் 139 ஓட்டங்களை எடுத்த நிலையில், சகீர்



கான் வீசிய பந்தில் டெண்டுல்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 220 பந்துகளில் 16 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். அப்போது ஸ்கோர் 598 ஆக இருந்தது.

இதையடுத்து 7ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக கம்ரன் அக்மல் களமிறங்கினார். ஸ்கோர் 599ஆக இருந்தபோது ரசாக் ஆட்டமிழந்தார். அவர் 141 பந்துகளை எதிர்கொண்டு 5



பவுண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் 90 ஓட்டங்களைக் குவித்தார்.

ரசாக் ஆட்டமிழந்தவுடன் 7 விக்கெட் இழப்புக்கு 599 ஓட்டங்கள் எடுத்தநிலையில் பாகிஸ்தான் அணி ஆட்டத்தை டிக்ளேர் செய்வதாக அறிவித்தது.

பந்துவீச்சில், கும்ளே 3, பதான், சகீர்கான், ஆர்.பி.சிங் மற்றும் கங்கூலி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

606 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக ஷேவாக்கும், ராவிட்டும் களமிறங்கினர். அணி 8



ஓட்டங்களைப் பெற்றநிலையில்- ராவிட் வெறும் 2 ஓட்டங்களுடன் அக்தரின் பந்துவீச்சில் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து லக்ஷ்மன் களமிறங்கினார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை மாறாத நிலையில் ஷேவாக் 4 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலை யில் மொகமட் அசீப்பின் பந்தில் போல் டானார்.

தொடர்ந்து லக்ஷ்மனுடன், டெண்டுல்கர் இணைந்து கொண்டார். இருவரும் நிதானமாக ஆடிக்கொண்டிருக்கையில் - அணியின் ஸ்கோர் 63ஆக இருக்க, மொகமட் அசீப்பின் பந்துவீச்சில் 21 ஓட்டங்களுடன் லக்ஷ்மன் போல்டானார்.

அடுத்து டெண்டுல்கருடன், கங்கூலி இணைந்து கொண்டார். அணி 74 ஓட்டங்களைப் பெற்றநிலையில் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த டெண்டுல்கர் - மொகமட் அசீப்பின் பந்தில் போல்டானார். 74 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 4 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி திணறியது.

இந்த நிலையில் கங்கூலியுடன்



ஜோடி சேர்ந்த யுவராஜ் சிங் மட்டும் ஓரளவுக்கு சிறப்பாக ஆடினார். இருவரும் இணைப்பாட்டமாக 103 ஓட்டங்களைப் பெற்று ஓரளவு பிரகாசித்தனர். இந்தநிலையில் அணியின் ஸ்கோர் 177ஆக இருக்க 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த கங்கூலி - அப்துல் ரசாக்கின் பந்தில் எல்.பி. டபிள்யூ ஆனார்.

அவரைத் தொடர்ந்து யுவராஜுடன் டோனி ஜோடி சேர்ந்தார். அவ



ரும் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணியின் தோல்வி உறுதியானது.

தொடர்ந்துவந்த பதான் 4, கும்ளே 5, சகீர்கான் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றனர்.


இறுதியாக சிறப்பாக ஆடிய யுவராஜ்சிங் - அணியின் ஸ்கோர் 265ஆக இருக்கும்போது - 144 பந்துகளில் 19 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 122 பெற்ற நிலையில், அப்துல் ரசாக்கின் பந்தில் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஆர்.பி.சிங் ஓட்டமெதையும் பெறாதநிலையில் ஆட்டமிழக்காதிருந்தார்.

இதனால் இந்திய அணி 341 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

பந்துவீச்சில் அப்துல் ரசாக் 4, மொகமட் அசீப் 3, டனேஷ் கனேரியா 2, சொகைப் அக்தர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

3 போட்டிகளைக் கொண்ட தொடரில் முதலிரு போட்டிகளும் சமனிலையில் முடிவடைந்தாலும், கடைசியாக நடைபெற்ற இந்தப் போட்டியில் வென்றதன் மூலம் பாகிஸ்தான் அணி தொடரை 1:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

## மொகமட் யூசுப் டெஸ்டில் 5000



கராச்சி —

பாகிஸ்தானின் மொகமட் யூசுப் இந்தியாவுடனான முதல் இனிங்ஸில் 22 ஓட்டங்களை எடுத்தபோது, டெஸ்ட் அரங்கில் 5 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய பெருமையைப் பெற்றார்.

இந்த மைல்கல்லை எட்டும் ஐந்தாவது பாகிஸ்தான் வீரர் இவர். தற்போது 65ஆவது டெஸ்டில் விளையாடி வரும் யூசுப், இதுவரை 5 ஆயிரத்து 8 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

ஐந்தாயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்த பாகிஸ்தான் வீரர்கள் :

| வீரர் | போட்டிகள் | ஓட்டங்கள் | 100 | அதிகபட்சம் |
|---|---|---|---|---|
| மியாண்டட் | 124 | 8832 | 23 | 280 |
| இன்சமாம் | 106 | 8171 | 25 | 329 |
| சலீம் மலிக் | 103 | 5768 | 15 | 237 |
| ஜாகிர் அப்பாஸ் | 78 | 5062 | 12 | 274 |
| மொகமட் யூசுப் | 65 | 5008 | 16 | 223 |

விளையாட்டு

## சச்சின் டெண்டுல்கர் மீது தண்ணீர் போத்தல் வீச்சு

கராச்சி —



இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு மோசமான சம்பவம் நடந்தது. சச்சின் மீது ரசிகர்கள் தண்ணீர் போத்தலால் எறிந்தனர். முதல்நாள் ஆட்ட தேநீர் இடைவெளிக்குப் பின், ஆர்.பி.சிங் வீசிய ஓவரில் சச்சின் ஸ்குயர் லெக் திசையில் எல்லைக் கோட்டுக்கு அருகே நின்றிருந்தார். அப்போது தண்ணீர் போத்தல் ஒன்று அவர் மீது விழுந்தது.

உடனடியாக இதை நடுவர் ட்ரல் ஹோர்பரிடம் தெரிவித்திருக்கிறார் சச்சின். நடுவரும் கப்டன் ராவிட்டை அழைத்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்க வேண்டுமா எனக் கேட்டுள்ளார்.

அதற்கு ராவிட் பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமான அளவுக்கு இருக்கிறது. சச்சினுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றிருக்கிறார். இந்த விடயத்தை பெரிதுபடுத்த விரும்பாத சச்சினும், அதேயிடத்தில் களத்தடுப்புச் செய்வதில் தனக்கொன்றும் தயக்கமில்லை என்று கூறியிருக்கிறார். ஆனாலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உடனடியாக பலப்படுத்தப்பட்டன.

இதேபோன்ற சம்பவம் இதற்கு முன் 1997இல் சச்சினுக்கு நிகழ்ந்துள்ளது. அதுவும் இதே கராச்சியில்தான். கிரிக்கெட்டில் அறிமுகமான இடத்தில் 16 ஆண்டுகளுக்குப் பின்பு விளையாடுகிறோம் என்ற மகிழ்ச்சியில் இருந்த சச்சினிடம், ரசிகர்கள் இப்படி நடந்துகொண்டது வருத்தத்தை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மைதானத்தில் தண்ணீர் போத்தல் கொண்டுவருவதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை செய்துள்ளது.

## பாகிஸ்தானுடனான ஒருநாள் தொடர்

# இந்திய அணியிலிருந்து சௌரவ் கங்கூலி நீக்கம்

மும்பை —

பாகிஸ்தான் அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரில் கங்கூலி நீக்கப்பட்டுள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடர் அடுத்தமாதம் 6ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்தத் தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை மும்பையில் அறிவிக்கப்பட்டது. இதில் முன்னாள் கப்டன் சௌரவ் கங்கூலி மீண்டும் ஒருமுறை கழற்றிவிடப்பட்டுள்ளார்.

தொடர்ந்து ஒருநாள் போட்டிகளில் இவரை நீக்கிவருவதால் கங்கூலியின் எதிர்கால கிரிக்கெட் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது. தவிர, டெஸ்டில் இடம்பெற்றிருக்கும் அனில் கும்ளே, பார்த்திவ் பட்டேல், லக்ஷ் மன், ஜாபர் ஆகியோரும் சேர்க்கப்படவில்லை.

இவர்கள் அனைவரும் கராச்சி டெஸ்ட் முடிந்ததும் நாடு திரும்பி விடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

சௌரவைப் போலவே கடந்த சில



போட்டிகளாக ஒதுக்கப்பட்டுவந்த சகீர்கான் இந்த முறை அணியில் இடம்பெற்றுள்ளார். டெஸ்ட் தொடரில் அபாரமாக பந்துவீசியதன் மூலம் இவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவர் உட்பட அகர்கர், ஆர்.பி.சிங், பதான், ஸ்ரீசந்த் என ஐந்து ஐந்து வேகப் பந்துவீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர். மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்த ஹர்பஜன் சிங் மீண்டும் இடம் பிடித்துள்ளார். தமிழக வீரரான முரளி கார்த்திக்கிற்கு மீண்டுமொரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கங்கூலியின் நீக்கம் குறித்து கிரிக்கெட் சபை செயலாளர் நிரஞ்சன் ஷா கூறுகையில் -

தேர்வுக்குழுவில் கங்கூலியின் பெயரும் பரிசீலிக்கப்பட்டது. ஆனால் இலங்கை, தென்னாபிரிக்க தொடர்களில் வென்ற இந்தியக் கூட்டணியில் மாற்றம் செய்ய விரும்பவில்லை. அதே வெற்றிக் கூட்டணியை பாகிஸ்தானிலும் களமிறக்க முடிவு செய்துள்ளோமெனத் தெரிவித்தார்.

அணி விபரம் -

ராவிட் (கப்டன்), ஷேவாக், சச்சின், காம்பீர், யுவராஜ் சிங், கைப், டோனி, சுரேஷ் ரெய்னா, ஹர்பஜன் சிங், முரளி கார்த்திக், அகர்கர், ஸ்ரீசந்த், பதான், சகீர்கான், ஆர்.பி.சிங்.

போட்டி அட்டவணை -

6 - முதல் ஒருநாள் (பெஷாவர்)
11 - 2ஆவது ஒருநாள் (ராவல்பிண்டி)
13-3ஆவது ஒருநாள் (லாகூர்)
16-4ஆவது ஒருநாள் (முல்டான்)
19-5ஆவது ஒருநாள் (கராச்சி).

## இலங்கையணியுடனான போட்டி; பங்களாதேஷ் வீரர்கள் தெரிவு



டாக்கா —

அடுத்தமாதம் இலங்கை அணிக்கு எதிராக பங்களாதேஷில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிக்கான 20 பேர் கொண்ட அணியை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அடுத்தமாதம் 19ஆம் திகதி இலங்கை அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்த போட்டித் தொடருக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாமை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அணியின் பயிற்சியாளர் டேவ் வட்மோர் ஆரம்பிக்கவுள்ளார்.

இந்த அணியில் மீண்டும் அலோக் கபாலி சேர்க்கப்பட்டுள்ளார். அணி விபரம் வருமாறு -

ஹபிபுல் பசார் (கப்டன்), காலித் மசூத், சாியர் நபீஸ், ஜாவிட் ஓமர், நபீஸ் இக்பால், ரஜின் சாலே, மொகமட் அஸ்ரபுல், அப்ராப் அகமட், துஷார் இம்ரான், மொகமட் ரபீக், மஞ்சுரல் இஸ்லாம் ராணா, அலோக் கபாலி, இனாம் - உல்-ஹக், காலித் மகமூத், அப்துல் ரசாக், மஸ்ரவ் மொற்ராசா, ரபாஷ் பாசியா, சயீத் ரஷல், நஸ்புல் ஹுசேன், சதாத் ஹுசேன்.

# புற்றுநோயால் பாதிப்புற்றோருக்கு அன்பான உபசரிப்பு அத்தியாவசியம்

## லண்டன் கேன் நிறுவனத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம்

உடுவில்

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் மனிதநேயத்தோடு ஒருவர் மற்றவருக்கு உதவி செய்து வாழ வேண்டும். இதுவே மனித தர்மம். கல்விப்பணி, சுகாதாரப்பணி, அறப்பணி போன்ற பணிகள் மக்களுக்கு செய்யப்படுகின்றது. இவற்றைவிட நோயாளர் பராமரிப்பு சேவை பணி மிகவும் உன்னதமானது. நாங்கள் மேலை நாடுகளில் வாழ்ந்தாலும் கூட எமது தாய் மண்ணை மறக்கவில்லை. இங்குள்ள எமது உடன் பிறப்புகளுக்கு என்ன உதவி செய்யலாம் என்ற எண்ணத்திலேயே அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு உடுவில் சபாபதிப் பிள்ளை வீதியில் கணபதி ஐயர்-ஸ்ரீராகவன் ஐயரால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் அமைக்கப்பட்ட புற்றுநோயாளர் காப்பகத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்து உரையாற்றிய லண்டன் கேன்.நிறுவனத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

இந்தக் காப்பகத்தை அமைக்க விடா முயற்சிகள் மேற்கொண்ட ஆறு.திருமுருகன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆசியுரையை தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

அங்கு தொடர்ந்து தர்மகுசிங்கம் உரையாற்றும்போது- புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்பான உபசரிப்பு எப்போதும் அவசியம். அவர்கள் தமது நோயைப்பற்றி கவலை கொள்வதால் உடலால் மட்டுமல்லாது உள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.எனவே, இங்கே எவ்வித பாரபட்சமுமின்றி அனைவரும் வந்து அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும். அவர்களுக்காக இங்கே வந்து இறைதியானம் ஆற்ற வேண்டும். நாங்கள் இதற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தோம். நீங்கள் தொடர்ந்து எவ்வித குறையுமின்றி பராமரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் ஆறு.திருமுருகன் தலைமை யுரையாற்றுகையில்

21 ஆம் நூற் றாண்டில் கண்டம் விட்டு கண்டம்பாயும் அணு ஆயுதத்தையும், விண் வெளிக்கு சென்று ஆராய்ச்சிகளையும் நடத்த கண்டு பிடித்த மனிதனால் புற்றுநோயக்கான மருந்தை இன்றுவரை கண்டு பிடிக்க முடியவில்லை. இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றகாலத்தில் பருத்தித்துறை வைத்தியசாலையில் வைத்து முதன்முதலாக கேன் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின் நான் பலதடவை லண்டன் சென்று அங்குள்ள மக்களுடன் எமது நாட்டு நோயாளி மகரகம சென்று கிசிச்சை பெறுவதில்படும் கஷ்டங்களை எடுத்துக் கூறியதன் பயனாக அவர்கள் தாய்மண் மீது வைத்துள்ள கருணையினால் இந்த பணி நிறைவேறியுள்ளது. எமது நாட்டிலும் கருணைப் பணிபுரிய பலர் ஆர்வமாக உள்ளனர். அவர்களை ஒன்று சேர்த்து நெறிப்படுத்தி இந்த நிலையத்தை மேலும் வளம்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

கேன் நிறுவனத்தில் பணிபுரியும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்ரேட்ஸ் கில்ஏன் உரையாற்றும் போது-

காப்பகம் என்றால் யாத்திரீகர் தங்கும் மண்டபம் என்றே முற்காலத்தில் கூறப்பட்டது. ஆனால், இன்று ஆபத்தான உயிரைப் பறிக்கும் புற்று நோயால் வருந்துவோரை அரவணைத்து ஆறுதல் அளித்து, பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தும் இடமாக காப்பகம் அமைந்துள்ளது.

இன்று இது ஒரு சிறிய ஆரம்பம் என்றாலும் கூடியவிரைவில் புற்று நோயாளரைப் பார்வையிடும் நிலையமாகவும், கிளினிக் வசதியுள்ளதாகவும், ஆன்மீக போதனைகள் மூலம் ஆற்றுப் படுத்தும் நிலையத்தையும் கொண்ட நவீன காப்பகமாக விளங்கும். இந்த நிலையத்தை அமைப்பதற்காக நிதி அன்பளிப்பு செய்த தர்மகுலசிங்கம் தம்பதியினருக்கும் மேலும் 32 ஆயி ரம் பவுண்கள் அதாவது 56 இலட்சம் ரூபா அன்பளிப்பு செய்த DUCTCHESE OF NOR FORIC அவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கிறோம் எனக் கூறினார்.

பிரதம விருந்தினராக வருகை தந்த யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷின் வாழ்த்துச் செய்தியை வாசித்தார்.

கேன் நிறுவனத்தின் யாழ் குழுத் தலைவி நவமலர் கனகரட்ணம் வரவேற்புரை நிகழ்த்தினார். பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி சிவபாலன் ஆகியோரும் உரையாற்றினர். ஸ்கந்தவரோதயக் கல்லூரி இசை ஆசிரியர் எஸ். சிவஞானராஜாவின் வாழ்த்துப் பாடலும் அங்கு இடம்பெற்றது. ஸ்ரீகணேசராசா நன்றி தெரிவித்தார். (101)

## கடற்தொழிலாளருக்கு வலைத்தொகுதிகள்

சுதுமலை

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட தொண்டமானாறு பிரதேச கடற்தொழிலாளகளுக்கு வலைத் தொகுதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன.

கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்ட வலைத் தொகுதிகள் 92 பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் நிறுவன பிரதிநிதி அலெக்ஸ், கடல் வளதிட்ட இணைப்பாளர் ரெட்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளதாக நிறுவன இயக்குனர் கி.யோ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார். (91)

## சங்காபிஷேகமும் மணவாளக் கோல விழாவும்

யாழ்ப்பாணம்

கச்சேரி -நல்லூர் வீதி பாணன் குளம் நாச்சிஅம்மன் ஆலய சங்காபிஷேகமும், மணவாளக் கோலவிழாவும் நாளை நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசை நடைபெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும், மாலை 4 மணிக்கு வசந்தமண்டப பூசையும் திருவூஞ்சலும் அம்பாள் வீதியுலாவும் நடைபெறவுள்ளன.

## இரத்ததான நிகழ்வு

சுதுமலை

நாச்சிமார் கோவிலடி வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை இரத்ததான நிகழ்வு இடம் பெறவுள்ளது.

நிலைய அங்கத்தவர்களுடன் அந்தப் பகுதி இளைஞர்களும், யுவதிகளும் இரத்ததான நிகழ்வில் பங்கு கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரிகள் கலந்து கொண்டு இரத்ததான நிகழ்வை நடாத்தவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (91)

## இயக்குனர் சபை உறுப்பினர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் விசேட பொதுக் கூட்டம் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போது வெற்றிடமாகவுள்ள மூன்று இயக்குனர் சபை உறுப்பினர்கள் வெற்றிடத்துக்கு கீழ்க் காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வெற்றிடத்துக்கு உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் எஸ். கணபதிப்பிள்ளை, யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிடத்துக்கு யாழ்.மாவட்ட சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். சிவசுப்பிரமணியம், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சமாசம் சம்மேளன வெற்றிடத்துக்கு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (21)

## ஆடலிசை குழந்தை பாடல்கள் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்

மயிலங்கூடல் பி.நடராசன் எழுதிய ஆடலிசை குழந்தைப் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது.

ஓவியர் கனகரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் நூலை வெளியிட்டு வைக்க, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

நூலின் மதிப்பீட்டுரையை சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் நிதிச் செயலாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கவிஞர் சோ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் கலாநிதி சி.சிவலிங்கராசா ஆகியோர் நிகழ்த்தினர்.



வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கால்கோல் விழா நிகழ்வில் மங்கள விளக்கை வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் கோ.சற்குணபாலன் ஏற்றுவதையும், அருகில் அதிபர் த.தவேந்திரராஜா, மாணவத் தலைவன், சிரேஷ்ட ஆசிரியர்கள் சகிதம் காட்சியளிப்பதையும் படத்தில் காணலாம்.

## யாழ்ப்பாணம் பலாலி வீதி திருத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்

யாழ்.நகர மையப் பகுதியிலிருந்து 1 கிலோ மீற்றர் நீளமான பலாலி வீதியில் வீதி புனரமைப்பு வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், பலாலி வீதியில் யாழ்.நகரமையப் பகுதியிலிருந்து இலுப்பையடிச் சந்தி வரையிலான வீதிப்பகுதி போக்குவரத்துக்காக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் அதிகார சபையினரால் சில நாட்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிக மோசமாக இந்த வீதி பாதிக்கப்பட்டு இருந்தமையால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தன.

பலாலி வீதியில் குறிப்பிட்ட இந்த வீதிப் பகுதி போக்குவரத்துக்காக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால் பலாலி வீதியால் யாழ்.நகர் வரும் 764 ஆம் மார்க்க பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் யாவும் இலுப்பையடிச் சந்தியுடன் திரும்பி நாவலர் வீதி மற்றும் ஏனைய மார்க்கங்கள் ஊடாக யாழ்.நகரை அடைகின்றன.

## துும்பளை மாதா ஆலய பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கை

துும்பளை

துும்பளை லூர்துமாதா ஆலயத்தைச் சூழவுள்ள பகுதியை இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்டனர்.

இந்தத் தேடுதல் சம்பவம் நேற்று முன்தினம் காலை 7.00 மணி முதல் 10.00 மணிவரை நடைபெற்றது.

பருத்தித்துறை துும்பளை லூர்து மாதா ஆலயத்தை சூழவுள்ள பகுதியை சுற்றிவளைத்து இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்தினர். இராணுவத்தினர் இந்த பகுதியில் சுற்றி வளைப்பு தேடு தலை நடத்தியதன் காரணமாக பொதுமக்கள் எவரும் சுற்றிவளைப்பு நடைபெற்ற பகுதியில் இருந்து வெளியே செல்லவும் உள்ளே வரவும் அனுமதிக்கப்படவில்லை. இந்த சுற்றிவளைப்பில் 500க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சுற்றிவளைப்பின் காரணமாக இந்தப் பகுதியில் நேற்று முன்தினம் காலை மக்கள் மத்தியில் பதற்ற நிலை காணப்பட்டது.



தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பழைய மாணவர் மு.ஜெயராஜா ஒலிபெருக்கி சாதனங்களை அன்பளிப்புச் செய்வதையும், அதிபர் சு.சண்முககுலகுமாரன், உப அதிபர் ஐ.மனோகரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

**வீதிகளிலும், வீதியோரங்களிலும் பசுமைகாத்துப் புழுதி தவிர்ப்போம்.**

## வைத்தியசாலை வீதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

### மாநகர சபை ஆணையாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்

யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து போதனா வைத்தியசாலை வரையான பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மாநகரசபை ஆணையாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பஸ்நிலையத்திலிருந்து யாழ். போதனாவைத்தியசாலையின் கிழக்கு வாசல் பகுதி நடைபாதைவரை அத்து மீறி வியாபாரத்தில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நடைபாதையானது பஸ் நிலையத்திலிருந்து நோயாளர்கள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றவர்கள் வைத்தியசாலை செல்வதற்காக அமைக்கப்பட்டதென்றாகும்.

அந்த நடைபாதையில் வியாபாரம் செய்வதால் அவர்கள் நடைபாதையை பாவிக்க முடியாது பலத்த அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன், பாதுகாப்பற்ற, பதற்றமான சூழ்நிலைகளில் வீதி வழியே வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியுள்ளது.

எனவே இந்த வீதியை வியாபார நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் பாவிப்பதை அனுமதிக்க முடியாது. இந்த இடங்களிலிருந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடாது விலகிக் கொள்ள வேண்டும். விலகாதவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அதனால், ஏற்படக்கூடிய அசௌகரி யங்களுக்கும், பொருள் இழப்புக்களுக்கும் நீங்களே பொறுப்பாவீர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# தொழில் மலர்



## வீணேபொழுதைபோக்கும் இளைஞர்களே

# வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுங்கள் நிறைந்த பலனும் பயனும் கிட்டும்









படித்து விட்டு வீணே பொழுதைக் கழிக்கும் பல இளைஞர்களை நாம் பார்க்கின்றோம். படித்து விட்டோம். வேலை கிடைக்கவில்லை. நாம் என்ன செய்வோம். பொழுதை எப்படிக் கழிப்போம் என்று சிந்தித்தபடி பல இளைஞர்கள் சுற்றித்திரிகிறார்கள்.

இப்படியான இளைஞர்கள் வீட்டுத் தோட்டம் செய்யலாம். அது நல்லதொரு இலாபகரமானதும் மகிழ்ச்சியானதுமான பொழுபோக்கும் தொழில் முயற்சியும் கூட.

வீட்டுத்தோட்டம் என்றால் என்ன? அதை எப்படி மேற்கொள்வது? வீட்டுத் தோட்டத்தில் எவ்வகையான பயிர்களைப் பயிரிடலாம்? என்று பல கேள்விகள் எழுகின்றனவா? பொதுவாக வீட்டுத் தோட்டம் என்றால் என்பதை சுருக்கமாக விளக்கும் வகையில் இங்கு சில தகவல்கள் தரப்படு கின்றன.

ஒருவர் குடியிருக்கும் வீட்டைச்சுற்றியுள்ள எஞ்சிய நிலப் பரப்பிலே வீட்டுத் தோட்டத்தை அமைக்கலாம். இந்த நிலப்பரப்பு குறுகியதாக இருக்கலாம் அல்லது விசாலமானதாக இருக்கலாம். இடப்பரப்புக்கு ஏற்றவகையில் பயிர்களின் தொகையை அதிகரிக்கலாம்.

வீட்டுத்தோட்டத்தில் குறுகியகாலப் பயிர்களையும் குடும்பத்திலுள்ள அனைவரினது தேவைகளுக்கான மரங்களையும் நாட்டலாம். பயிர்களைத் தேர்ந்தெடுக்கும் போது இலைகளை அதிகம் கொண்ட மரக்கறிகளினாலும், மரங்களைத் தேர்ந்தெடுக்கும் போது குறுகிய காலத்தில் பழங்களைத் தரக் கூடிய மரங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

முருங்கை, ரம்பை, கறிவேப்பிலை, தேசி, தோடை ஆகியவற்றை நாட்டுவது அவசியமாகும். குடும்பத்தவரின் பழத் தேவைகளை பூர்த்தி செய்ய வாழை, பப்பாசி ஆகியவற்றை நாட்டவும்.

மரக்கறிச் செய்கையை பூந்தோட்டத்துடன் இணைத்தும் மேற்கொள்ளலாம். பூமரங்கள் வீட்டுக்கு அழகை கொடுக்கும் அதேவேளை, மரக்கறிகள் உங்கள் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

பழம்மரங்களை நடும்போது சூரிய வெளிச்சம் உள்ள இடத்தில் நடவும். ஏனையவற்றை ஓரளவு நிழல் உள்ள இடத்திலும் நடலாம். உங்கள் வீட்டுத் தோட்டம் வெற்றி நடைபோட வேண்டுமென்றால் முழுமையான நீர்வசதி கிடைக்க வேண்டும்.

மரக்கறிச் செய்கையை மேற்கொள்ளும் போது, அதிக போஷாக்கை வழங்கக் கூடிய மரக்கறிகளை தெரிவு செய்ய வேண்டும். குடும்பத்தில் உள்ள அனைவரும் வருடம் முழுவதும் சமமான போஷாக்குள்ள உணவை உண்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் மரக்கறி, பழமரச் செய்கைளை மேற்கொள்ள வேண்டும். இலைகளைக் கொண்ட மரக்கறிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

பின்வரும் மரக்கறி வகைகளைப் பயிரிட்டு அதிக பயன்களைப் பெறலாம்.

கங்குன், பொன்னாங்காணி கீரை, வல்லாரை, முருங்கை, கோவா, கத்தரி, போஞ்சி, வெண்டிக்காய், பாகற்காய், கருணைக்கிழங்கு, தக்காளி, மிளகாய், மரவள்ளி, பயிற்றை, அவரைவகைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

விட்டுத்தோட்டம் மூலம் நிறைந்த பயனைப் பெறுவதற்கான கிருமி அழித்தல், உரங்கள் தொடர்பான விளக்கங்கள் அடுத்த வாரம்.......

(தொடரும்)

# மாசிக் கருவாடு தயாரிப்பது எப்படி?



ஒரு இறாத்தல் மாசிக் கருவாட்டை உற்பத்தி செய்ய 4 இறாத்தல் பலயா மீன் (சூரைமீன்) தேவையாகும்.

**செய்முறை**


மீனை நன்றாக கழுவி தலையையும், வாலையும் வெட்டி எறியவும். பின்னர் மீனைப் பெரிய பாத்திரத்தில் போட்டு அவிக்கவும். அவித்த மீனை வெளியில் எடுத்து சீலையின் உதவி கொண்டு மீனில் சேர்ந்துள்ள நீரைப்பிழிந்து வெளியேற்றவும். முட்டைகளையும், குடல்களையும் வெளியேற்றி விட்டு மீனை நீளப்பாடாக நான்கு துண்டுகளாக வெட்டவும்.

வெட்டிய இந்த மீன் துண்டுகளில் சாம்பலைப் பூசி அடுப்புத்தணலில் வேகவைக்க வேண்டும். அதன்பின் 3-4 நாட்களுக்கு சூரிய ஒளியில் அல்லது மீன் இறுகி கடினமாகும் வரை காயவிட வேண்டும்.

இப்பொழுது மாசிக்கருவாடு தயார். சிறுதுண்டுகளாக வெட்டிப் போத்தலில் அடைத்தால், நீண்ட காலத்துக்கு வைத்திருக்கலாம்.


# முட்டையின் அளவை அதிகரிக்கும் வெங்காயம்

முட்டையிடும் கோழிகளுக்கு சிறுதுண்டுகளாக்கப்பட்ட வெங்காயத்தை கொடுத்தால் பல நன்மைகள் உண்டு. கோழிகள் முட்டையிடும் நாட்கள் அதிகரிக்கும், முட்டையின் அளவு அதிகரிக்கும், முட்டையின் நிறைகூடும், சிறந்த மணத்தைக் கொடுக்கும், முட்டைக் கோதை தடிப்பாக்கும் கோழிகளின் பசித்தன்மையை அதிகரிக்கும்.



பிலிப்பைன்ஸில் உள்ள தேசிய விவசாயக் கல்லூரியில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி ஒன்றின் போது, சிறு துண்டுகளாக்கப்பட்ட வெங்காயம் கோழிகளுக்கு கொடுக்கப்பட்ட போது, மேற்கூறிய 5 நன்மை களையும் ஆராய்ச்சியாளர்களால் பெறமுடிந்தது.

ஆராய்ச்சியின் போது 100 கோழிகளுக்கு 30 கிராம் வீதம் வெங்காயம் கொடுக்கப்பட்ட போது நாளொன்றுக்கு முட்டையிடும் வீதம் 79.5% இருந்தது அவதானிக்கப்பட்டது.



இதேவேளை 20 கிராம், 10 கிராம் வெங்காயம் கொடுக்கப்பட்ட போது முட்டையிடும் வீதம் முறையே 77. 3%, 73% ஆக இருந்தது. வெங்காயம் கொடுக்காதபோது முட்டையிடும் வீதம் 72.4% ஆக இருந்தது.



மேற்படி மூன்று வீத நிறைகளில் வெங்காயம் கொடுத்த போது கிடைத்த முட்டையின் சராசரி நிறையே 55.2%,54.1%,53.7% ஆக இருந்தது. வெங்காயம் கொடுக்காத போது முட்டையின் நிறை 53.7% ஆக இருந்தது.

# அவரை இனங்களை சேமித்து வைக்கும் முறை



பாசிப்பயறு, கௌபீ போன்ற அவரை இனங்களை பயிர் செய்யும விவசாயிகள் அவற்றைச் சேமிப்பதில் பொதுவாக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அறுவடை முடிந்தவுடன் அவற்றை குறைந்த விலைக்கு விற்று விட்டு பின்பு அவற்றையே நடுகைக்கும், உண்பதற்குமாக கூடிய விலை கொடுத்து வாங்குகின்றனர். இதனால் நாடெங்கும் பயிர்ச்செய்கையை பெற்றுக்கொள்ளும் விவசாயிகளுக்கு விதைகளை விநியோகிக்கும் பொறுப்பை விவசாயத் திணைக்களம் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் அநேக விவசாயிகள் மரபு வழியாக விவசாயத்தை மேற்கொள்ளும் குடும்பங்களிலிருந்து வராதவர்களாக இருப்பதால், பயிர்ச்செய்கையுடன் தொடர்பான மரபு வழி முறைகளை அறியாதவர்களாக உள்ளனர். பிந்திய பெரும் போகத்தில் அவரை இனங்களைப் பயிர் செய்யும் விவசாயிகள் சாவகச்சேரிப் பகுதியில் அவரை இனங்களைச் சேமிப்பதில் மரபு வழியாக மேற்கொள்ளும் முறையொன்று கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

**தேவையான பொருட்கள்**

(அ) மண் பானைகள் அல்லது கூடை. (பனையோலையால் செய்யப்பட்டது.)
(ஆ) உலர்ந்த நுண்மணல் அல்லது உலர் சாம்பல்.
(இ) மரத்தாலான தாங்கிகள்
(ஈ) மாட்டுச் சாணம்

**முறை**

சேமிக்கப்பட வேண்டிய பொருளின் அளவுக்கு ஏற்ப பாத்திரங்களைத் தெரிந்து கொள்ளவும். ஒரு புசலுக்குக் குறைந்த அளவெனின் மண் பானைகளில் சேமிக்கலாம். வெவ்வேறு அளவுடைய கூடைகளை யாழ்ப்பாணச் சந்தையிலோ அல்லது பனை அபிவிருத்திச் சபையிடமிருந்தோ வாங்கிக் கொள்ளலாம்.

விவசாயி கூடையை உபயோகிக்க விரும்பினால் மாட்டுச் சாணத்தை தடிப்பான கரைசலாக கரைத்து, கூடையின் உள்பக்கமும், வெளிபக்க மும் மெல்லிய படையாக பூசி வெயிலில் காயவிடுவதன் மூலம், சிறிய துவாரங்களை அடைத்துக் கொள்ளலாம். கூடையைத் தாங்கியின் மேல் வைக்க வேண்டும். பானைகள், நடுவதற்கு பாவிக்கப்படும் விதைகளைச் சிறிய அளவுகளில் சேமிப்பதற்கு மிகவும்பொருத்தமானவையாகும்.

பாத்திரங்களை உலர்ந்த, குளிரான இடத்தில் வைத்து நன்கு உலர்ந்த விதைகளை 6அங்குல உயரமுடைய படைகளாக இடவும். ஒவ்வொரு படைக்குமிடையே உலர்ந்த நுண்ணிய மணலை அல்லது உலர்ந்த சாம்பலை இடவும். இது விதைகளுக்கிடையே உள்ள இடைவெளியை நிரப்பும். இவ்வாறு விதைப் பொருட்கள் அனைத்தையும் நிரப்பிய பின், மேலே ஒரு அங்குலத்திற்கு மண் அல்லது சாம்பலால் நிரப்பவும். இம்முறை மூலம் விதைகளை எவ்வித சேதமுமின்றி ஒரு வருடம் வரை சேமித்து வைக்கலாம். மண்ணிலிருந்தோ, சாம்பலிலிருந்தோ விதைகளை அரிப்பதன் மூலம் இலகுவாகப் பிரித்தெடுக்க முடியும்.

**நன்மைகள்**

- விதைகள் இரசாயனங்களின் தொடுகைக்கு உட்படுவதில்லை.
- பீடைகள், பங்கசுக்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.
- கூடிய காலத்துக்கு சேமித்து வைக்கலாம்.
- விதைகள் வாழ்தகைவை இழக்கமாட்டா.
- பாத்திரங்களை உள்ளூரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.
- எந்தவொரு விவசாயியாலும் கைக்கொள்ளக்கூடியது.
- சந்தையில் கிடைக்காத காலங்களில் விவசாயி இவற்றை உயர் விலைக்கு விற்று உயர் லாபத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

# நமது பிரதேசத்துக்கு அதிக பயன் தரும் முருங்கை

**"ஒரு முருங்கை மரமும் பசு மாடும் இருந்தால், ஒரு குடும்பத்தையே காப்பாற்றலாம்"**

**"ஒரு முருங்கை மரமும் ஒரு வாழை மரமும் இருந்தால், வரும் விருந்தினருக்கு ஒரு வாரம் உணவு சமைக்கலாம்"**

பண்டைக்காலம் தொட்டு இலங்கை என்றால் முத்து, இரத்தினம், யானைத்தந்தம், கறுவா போன்ற வற்றுக்கு புகழ் பெற்றது போல, யாழ்ப்பாணம் என்றால் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் இராச வள்ளிக் கிழங்கு, முருங்கைக்காய் என்பவற்றால் புகழ்பெற்றது.


ப.அருந்தவம்

முருங்கையானது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிரசித்தி பெற்றிருந்த போதும், இலங்கையின் உலர்வலயம் எங்கும் சிறப்பாக வளரக் கூடியது. உலகில் இன்றும் இந்தியா, பிலிப்பைன்ஸ், வட ஆபிரிக்க, நாடுகள் பலவற்றிலும் முருங்கைச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு புதிய உயர்தர, அதிக விளைவு தரும் வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத் தோட்டங்களிலும் பண்ணைமுறையிலும் செய்கை பண்ணப்படுகின்றது. (1 ஏக்கர் பயிர்செய் நிலத்திலிருந்து 10 மெற்றிக் தொன் விளைவு பெறப் படுகின்றது)

**உபயோகங்கள்:-**

முருங்கை மரத்தில் பயன்படாத பாகமே இல்லை எனலாம். துளிர், இலை, பூ, பிஞ்சு, காய், விதை, மரப் பட்டை, வேர், பிசின், தண்டு போன்ற அனைத்துப்பாகங்களும் மருந்தாகவும் உணவாகவும் பயன்பட்ட வண்ணமே உள்ளன.

உயர் அழுத்தம் உள்ளவர்கள் முருங்கைக் கீரையை உருவாமல் காம்புடன் சிறுசிறு துண்டுகளாக வெட்டி சூப் செய்து தினமும் ஒரு வேளை பருகிவரின் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருக்கும்.

முருங்கைக் கீரையை அரைத்து காலையில் ஆட்டுப்பாலுடன் பருகின் கண் சம்பந்தமான நோய்கள் தீரும். கண்ணிற்கு ஒளியும் பெருகும்.

இடுப்பு வலி, இடுப்புச் சுருக்கு உள்ளவர்கள் வாரத்தில் இரு நாட்கள் முருங்கைக் கீரையை சமைத்துண்ணல் சிறப்பாகும்.

அத்துடன் இடுப்பு வலியால் கஷ்டப்படுபவர்கள் இக்கீரையை உப்புக் கலந்து இடித்து சூடு செய்து காலையும், மாலையும் பற்றுப்போட இடுப்புவலி இருந்த இடம் தெரியாது பறந்துவிடும்.

முருங்கையின் இளம்பிஞ்சை சிறு சிறு துண்டுகளாக வெட்டி சிறிதளவு உப்பு, மிளகுத்தூள் தூவி பச்சையாக உண்டால் வயோதிபரும் வாலிபராகலாம்.

முருங்கைப் பிசினை சுத்தப்படுத்தி நன்கு காயவைத்து தூள் செய்து அரைத் தேக்கரண்டி காலையும், மாலையும் பாலில் கலந்து உண்டால் ஆண்மைத்தன்மை பெருகுவதுடன், ஆண்கள் அழகான மிடுக்கான தோற்றமுள்ளவர்களாகவும் தோன்றுவர்.

முருங்கையின் எப்பாகத்தை ஆண்கள் உண்டாலும் ஆண்மைத் தன்மை அதிகரிக்கும்.

முருங்கைக் கீரையை உண்பதால் என்பு, பல் வளர்ச்சி சீரடைவதுடன், குருதி ஓட்டத்திற்கும் இது இன்றியமையாதது.

கருப்பை நோயுள்ள பெண்கள் முருங்கைப் பூவின் 50 கிராமை எடுத்து பருப்புடன் கலந்து உணவுடன் சேர்த்தால் இப்பிணி தீரும்.

வயிற்று அஜீரணம் உள்ளவர்கள் முருங்கை விதைப் பவுடரை வெறும் வயிற்றில் உண்டுவரின் அஜீரணத் தொல்லை குறையும்.

இவ்வாறான சிறந்த பயன் தரும் இந்த முருங்கைச் செய்கை முறைகளை நோக்குவோம்.

2.0 முருங்கை இனங்கள்.

முருங்கையில் செடி முருங்கை, மரமுருங்கை என இருபெரும் பிரிவுகள் உண்டு. பாரம்பரியமாக எமது பிரதேசத்தில் மரமுருங்கையே செய்கை பண்ணப்படுகின்றது. இருந்த போதும் தற்போது இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட செடி முருங்கையும் பயிரிடப்படுவதுண்டு.

2.1 மரமுருங்கையின் வர்க்கங்கள்.

எமது நாட்டில் உள்ளூர் மக்களின் தெரிவினால் உருவாகிய வர்க்கங்களே பெரிதும் பாவனையிலுண்டு. இருந்த போதும் இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இப்போது பாவனையிலுள்ள ஒரு சில முருங்கை வர்க்கங்களை அவதானிப்போம்.

**1. யாழ்ப்பாண முருங்கை.**

இது இலங்கையில் பிரபல்யம் மிகு வர்க்கமாகும். இந்தவர்க்க முருங்கைக் காய்கள் மிகவும் சுவையானது. இதற்குரிய பிரத்தியேக மணம் கொண்டது. உண்ணத்தக்க பகுதியை அதிகம் கொண்டது. காய்கள் மென்பச்சை நிறமானவை. 2 அடி தொடக்கம் 3 அடிவரை நீளமானவை.

**2.சாவகச்சேரி முருங்கை.**

இவ்வர்க்கம் வீட்டுத் தோட்டங்களில் செய்வதற்கு உகந்தது. அதிக காய்களை ஒரு போகத்தின் போது தரவல்லன. யாழ்ப்பாண முருங்கையுடன் ஒப்பிடுகையில் காய்கள் நீளமானவை. மாத்தன்மை குறைவானவை. மாறுபட்ட சுவை உடையவை.

**3. புணல் முருங்கை.**

இந்த மரங்கள் நேராக வளரும் இயல்புடையன. இதனால் வேலியில் நடுவதற்கும் பந்தல்கள் அமைப்பதற்கும் இவை சாலச் சிறந்தனவாகக் காணப்படுகின்றது. இதன் காய்கள் நீளம் குறைந்தவை. அத்துடன் தோல் மிகவும் தடிப்பாக காணப்படுகின்றது.

**4. பால் முருங்கை.**

இவ்வர்க்க மரம் தோற்றத்தில் கட்டையானது. இந்தக் காய்கள் சுவை குறைந்தவை. மாத்தன்மை குறைந்த உண்ணத்தகு பாகம் கொண்டது. காய்கள் மென்பச்சை நிறமானவை.

5. இவை தவிர இலையான் முருங்கை, கப்பல் முருங்கை, நாட்டு முருங்கை, வாகரை முருங்கை என்ற வர்க்கங்களும் பயன்பாட்டிலுண்டு.

**2.2 செடி முருங்கை/ விதை முருங்கை:**

இந்தியாவில் பல்வேறு வகையான விதை முருங்கை வர்க்காங்கள் காய்க்காகவும், விதைகளுக்காகவும் செய்கை பண்ணப்படுகிறது. இவை பெரும்பாலும் விதை மூலமே இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது.

இவ் முருங்கை நட்டு 6 மாதத்தில் காய்க்கத் தொடங்கும். ஒரு போகத்தில் காய்த்து ஓய்ந்ததும் செடிகள் 3 அடி உயரத்தில் கப்பாத்துப் பண்ணப் படும். இதன் பின் புதிய கிளைகள் உருவாகி 4 மாத காலத்தில் மீண்டும் காய்க்கத் தொடங்கும்.

இவ்வாறாக நான்கு ஐந்து வருடங்களிற்கு தொடர்ச்சியாகப் பயன் பெறலாம்.

3.0 மரமுருங்கைச் செய்கை.

**(3.1) தேவையான காரணிகள்.**

அ) மண்வளம்:

கடினமான நீர்தேங்கி நிற்கும் களித்தன்மையான மண் தவிர்ந்த ஏனைய மண் வகைகளில் வளரக் கூடியது. ஆனாலும் மணல் தன்மையான இருவாட்டி மண் இதற்கு மிகவும் சிறப்பானது.

ஆ. காலநிலைத் தேவை:

உலர் வலையக் காலநிலை இதற்கு மிகவும் உகந்ததாகக் காணப்படும். பூக்கும் காலங்களில் மழை இல்லாது இருத்தல் விளைவை அதிகரிக்கச் செய்யும்.

(3.2) நடுகை:

இங்கு தண்டுத் துண்டங்களே நடுகைக்குப் பயன்படுகின்றன. தண்டுத் துண்டங்கள் ஓர் ஆண்டைவிட வயது கூடியனவாகவும் இரண்டு ஆண்டுகளுக்கு குறைந்த வயதுடையனவாகவும் உள்ள கிளைகளிலிருந்து பெறப்பட்டு நடுகை செய்யப்படுகின்றன.

அ. நடுகைக் காலம்:

யூன், யூலை மாதங்களில் நடுகை செய்தல் சிறப்பாகஅமையும்.

(பெரும்பாலும் ஆடி அமாவாசைதினத்திலும் ஆடிப்பிறப்பிலும் முருங்கை நடுவதை யாழ்ப்பாணத்தில் சிலர் வழுக்கமாகக் கொண்டுள்ளனர்)

ஆ. நடுகை:

பண்ணையாகச் செய்வதாயின் 5×5 மீற்றர் இடைவெளியில் தண்டுத் துண்டங்கள் சிறுபகுதி அமைத்து அதனுள் சேதனப்பசளை இட்டு நாட்டப்படும்.

**(3.3) நீர்ப்பாசனம்:**

அதிகம் நீர்ப்பாசனம் தேவைப்படுவதில்லை. மழை மூலம் கிடைக்கும் நீரே போதுமானது. நடுகை செய்து சிறிது காலம் மழையின்றியிருப்பின் மட்டும் கைகளினால் பாசனம் செய்தல் போதுமானது.

**(3.4) பசளைப் பிரயோகம்.**

காலத்திற்கு காலம் பசளைப் பிரயோகம் மேற் கொள்ளல் விளைவை அதிகரிக்கச் செய்யும். இங்கு சேதனப் பசளைகள் மழையுடன் இடப்படலாம். இலங்கையில் அசேதனப் பசளை இடல் மிகக் குறைவாகவே உள்ளது.

**(3.5) கத்தரித்தல்:**

காய்கள் காய்த்து ஓய்ந்ததும் கத்தரித்தல் மேற்கொள்ளப்படும். இதனால் புதிய கிளைகள் உருவாகும் புதிய கிளைகளிலேயே அதிகம் பூக்கள் உருவாகி காய்கள் உருவாகும்.

**(3.6) பீடைச் சேதம்:**

பொதுவாக நோய் பீடைகள் முருங்கையைத் தாக்குவதில்லை. ஆனாலும் சில மயிர்க்கொட்டிப் பீடைகள் முருங்கையைத் தாக்கும். யூப்டிரோட் மெல்லிஃ பெரா போன்ற மயிர்க்கொட்டிப் பீடை பச்சை இலைகளை அரித்து உண்ணும். இதனால் இலைகள் அற்ற நிலை மரத்தில் தோன்றும். இதனைக் கட்டுப்படுத்த பொதுவாக காவோலையால் சுடுதல் முறை பயன்படுத்தப்படும். சேதம் அதிகமாயின் குளோரோபைரிபோஸ் எனும் இரசாயனம் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

**3.6 அறுவடை**

காய்கள் முற்றுமுன்னர் அறுவடை செய்ய வேண்டும்.

வெட்ட வெட்டத் தழைக்கும் ஒரு மரமான முருங்கையைப் பயிரிட்டுப் பல பலன்களைப் பெறுவோம். வீட்டுத் தோட்டங்களிலும், வெற்றுத் தரைகளிலும், கொல்லைப்புறங்களிலும், வேலிகளிலும் முருங்கையைச் செய்து அதிக பயன் பெறுவோம்.

# நெல் நாற்று மேடைகள்

நாற்று நடுகை முறை நெற் செய்கைக்கு நாற்றுக்கள் தேவைப்படுவதால் நாற்றுக்களை உண்டு பண்ணும் முறைகளைப் பற்றி அறிதல் அவசியமாகின்றது. நெல் நாற்றுக்களை சூழ் நிலைக்கும் சுவாத்திய வசதிக்குமேற்ப பலவாறு உண்டுபண்ணலாம். நாற்று மேடைகளுள் பிரதானமானவை சில பின்வருமாறு: -

1. மேட்டு நில நாற்று மேடை
2. சேற்று நில நாற்று மேடை
3. "டப்பொக்" நாற்று மேடை
4. பிறவகை நாற்று மேடைகள்

**மேட்டு நில நாற்று மேடை**

வயலுக்கு நீர் கிடைப்பதற்கு முன்பு நாற்றுக்களை உற்பத்தியாக்க வேண்டிய சந்தர்ப்பங்களிலும் உவர் செறிந்த நிலங்களிலும் ( உ -ம் சிந்து



நதிப்பள்ளத்தாக்கு உவர் வெளிகளில்) மேட்டு நில மேடைகள் அமைத்தல் வழமையாகும். மேட்டு நிலத்தில் கேணி, கிணறு போன்ற நீர் நிலைகளுக்கு அண்மையில் உழுது பண்படுத்திய நிலத்தில் 4 அடி அகலமும் வசதிக்கேற்ற நீளமும் கொண்ட மேடைகளை அமைத்து அவற்றுக்கு உரமிட்டு மட்டப்படுத்திய பின் விதையிடப்படும். உலர்ந்த நிலத்தில் உலர்ந்த விதைகளையோ அல்லது நீரில் ஊற விட்ட விதைகளையோ குறுக்கு நிரைகளில் கால் அங்குல ஆழத்துக்கு இட்டு மூடியபின் பூவாளியினால் காலையிலும் மாலையிலும் நீர் விட்டு வளர்க்கப்படும் மேட்டு நிலத்தில் சிலிக்கா கிரகித்தல் குறைவாக நடைபெறுவதால், இங்கு எரிவந்த நோய் இலகுவில் உண்டாவதற்கு இடமுண்டு. கருகிய உமியை மேடையில் பரவிவிட்டால் எரிவந்த முட்பட பல பூஞ்சண நோய்களைக் குறைப்பதுடன் களைகளையும் கட்டுப்படுத்தும். மேட்டு நில மேடையில் நாற்று வளர்ச்சி மத்திமமாகவே இருக்கும். ஆகையால் நாற்றுக்களை ஒரு மாத காலத்துக்கு மேலும் மேடையில் வைத்திருந்து நடலாம்.

**சேற்று நில நாற்று மேடை -**



நீர் விட்டு உழுது சேறாடி மட்டப்படுத்திய நிலத்தில் 4 அடி அகலமும், வசதியான நீளமும் கொண்ட மேடைகளை அமைத்தோ அல்லது சேறாடி மட்டப்படுத்திய வயலில் இடையிடையே வடிகால்கள் அமைத்த பின்போ முளைகட்டிய விதையை விதைக்கலாம். ஓர் ஏக்கருக்குத் தேவையான நாற்றை ஒரு புசல் நெல்லை பத்தில் ஒரு ஏக்கர் இடப் பரப்பில் விதைத்துப் பெற்றுக் கொள்ளலாம். பயிர் நன்கு வளர்வதற்கு உரமிடல் அவசியமாகும். முளைத்த ஒரு கிழமையின் பின் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பூச்சிநாசினி தெளித்தலும் வேண்டும். நாற்றுப்பிடுங்குவதற்கு முதல் நாள் நன்றாக நீர் விட்டுக் கட்டுவது நாற்றுக்கள் சேதமுறாது (வேரறாது) பிடுங்க வசதியளிக்கும். பிடுங்கிய நாற்றுக்களைச் சிறு சிறு பிடிகளாகக் கட்டுவதுடன் அதிகளவு நீண் டிருக்கும் இலைகளையும் வேர்களையும் கத்தரித்துக் கொள்ள வேண்டும். இலைகளைக் கத்தரிப்பதால் நடுகையின் போது நாற்றுக்கள் சாய்ந்து விழா திருப்பதுடன் மஞ்சள் சந்து குத்திப் பூச்சியின் முட்டைக் கும்பல்கள் இருப்பின் அவையும் அகற்றப்படுகின்றன. மழை காலத்தில் இந்தக் கத்தரிப்புத் துவாரங்களினூடாக பக்றீரியாக் கிருமிகளும் உட்சென்று நோயை உண்டாக்க இடமுண்டு.

**டப்பொக் முறை நாற்று மேடை (கம்பள மேடை)**

பிலிப்பைன்ஸ் நாட்டில் இந்த மேடை அமைத்தல் வழமையாகும். நாற்றுக்கும் நிலத்துக்கும் தொடர்பில்லாத வகையில் இங்கு நாற்றுக்கள் வளர்க்கப்படும். நாற்றுக்கள் இரண்டு கிழமைகளுக்கு வளர்வதற்கு விதையினுள் இருக்கும் உணவு போதுமானதாகையால், வேர் நிலத்தில் செறிவதைத் தடுத்து வேர் செறிவதற்குகந்த மண் மேடை தயாரிப்பதையும், வேர் செறிந்த பின் பிடுங்கி எடுக்கும் சிரமத்தையும் தவிர்ப்பதால் இந்தமுறை மேடையமைத்தல் விரும்பப்படுகிறது. மிகக் குறைந்தளவு நீர் வசதியுடன் சம மட்டமான சீமெந்து நிலங்களிலோ மட்டுப்படுத்தப்பட்ட வயல் நிலங்களி லோ பலகைகள், மேசைகள், மேலோ இந்த மேடையைப் போடலாம். பிலிப்பைன்ஸ் நாட்டில் மேடை போடுங்காலங்களில் பாவிக்கப்படாத வயல் வீதிகளில் இந்த மேடையைப் போடுவார்கள். வீட்டு முற்றங்களில் இந்த மேடைக்கென அமைக்கப்பட்ட சீமெந்துத் தரைகளில் இந்த டப்பொக் மேடையமைத்துப் பின் அவற்றை மீற்றர் கணக்கில் அளந்து வெட்டி விற்பார்கள். நாற்றுக்களை கொள்வனவு செய்வோர் அவற்றை பாய்போல் சுருட்டி எடுத்துப் பலமைல் தூரத்துக்கும் மிக இலகுவில் எடுத்துச் செல்வர்.

மேடையமைக்கும் நிலம் சீமெந்து நிலமானால், அதன்மேல் விதையிடலாம். மேடையமைக்கும் நிலம் மட்டப்படுத்தப்பட்ட மண் அல்லது சேற்று நிலமானால், அதன்மேல் பொலித்தீன் கடதாசியோ வாழை இலையோ பரவியபின் அதன் மேல் வித்திடலாம்.

மேடையைச் சுற்றி நாற்புறத்திலும் 2-3 அங்குல உயரமான அணைச்சுவர் அமைத்தல் வேண்டும். மேடையை விட்டு விதை விலகாதிருக்கவும், குறுகிய நல்ல உருவமைப்புடைய மேடையையும் பெறுவதற்கு இந்த அணைச்சுவர் உதவுகின்றது. மரச்சிலா கைகளையோ அல்லது சிலாகை போல் கிழித்தெடுத்த வாழை மடல்களை யோ உபயோகித்து இவ்வணைச் சுவர்களை அமைக்கலாம். முளைவேர் கால்அங்குல அளவில் வெளிவந்த நிலைக்கு முளைகட்டிய விதையை மேடையில் மிகச் சமமாகத் தூவ வேண்டும். எங்கும் சமமாக மூன்று விதை ஆழத்துக்கு அல்லது கால்அங்குல ஆழத்துக்கு விதை விழுந்திருத்தல் அவசியமாகும். இதன்படி ஒரு சதுர மீற்றருக்கு மூன்று கிலோ விதை உபயோகிக்கப்படும். விதை தூவப்பட்ட பின் இவை விழுந்த இடத்தை விட்டு விலகாதவாறு மிக மென்மையாக நீர் தெளித்த பின் ஓர் பலகையால் அமத்தி மட்டப்படுத்த வேண்டும்.

(தொடரும்.....)

# அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் 'விஸ்வநாத்' மாதிரி முன்பள்ளி திறப்பு

முல்லைத்தீவு

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட விஸ்வநாத் மாதிரி முன்பள்ளி திறப்பு விழா நிகழ்வு முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் காஞ்சூரமோட்டைப் பகுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடர், மங்கள விளக்கு ஆகியவை ஏற்றப்பட்டதுடன், தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. தேசியக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடி, முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழக கொடி, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக்கொடி ஆகியவை ஏற்றப்பட்டன.

பெயர்ப் பலகையை டெனிஸ் அகதிகள் பேரவையின் ஆற்றல் விருத்தி அலகு பொறுப்பதிகாரி த.கார்த்தி திரைநீக்கம் செய்து வைத்தார். முன்பள்ளியின் பிரதான கட்டடத்தை டெனிஸ் அகதிகள் பேரவை உதவி வதிவிடப் பிரதிநிதி றஞ்சன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

முன்பள்ளியின் ஆவணக்காப்பக அறையை முல்லைத்தீவு மாவட்ட சிக்கனக்கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் கே.ஸ்ராலின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கிராம மட்ட அமைப்புகளின் ஆவணக் காப்பறையை ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு வெளிக்கள அலுவலர் க.லக்சன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

விளையாட்டு முற்றத்தை கற்சிலைமடு திலீபன் மருத்துவமனை வைத்தியர் ஈழவாணி திறந்து வைத்தார். விளையாட்டு முற்றத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வை முல்லைத்தீவு மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் க.பாலசுப்பிரமணியம் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து சிறப்புரைகள், நன்றியுரைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர்கள், ஊழியர்கள், டெனிஸ் அகதிகள் பேரவைப் பிரதிநிதிகள் மற்றும் காஞ்சூரமோட்டைக் கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் கடற் தொழிலாளருக்கு படகு தொகுதிகள்

வடமராட்சி

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு ஜேர்மனிய அரசாங்கமும், மெகாக் நிறுவனமும் இணைந்து 100 படகுத் தொகுதிகளை அண்மையில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஊடாக வழங்கின.

வடமராட்சி கிழக்குக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனையில் சாமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மங்கள விளக்கை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன வடபகுதிப் பொறுப்பாளர், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன யாழ்.அலுவலகத்தைச் சேர்ந்த திட்ட உதவியாளர் பேர்சி ஜெயக்குமார், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் செ.வ.செபநாயகம், வடமராட்சி கிழக்கு தமிழீழ காவற்துறை பணிமனை உதவிப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு தமிழீழ காவல்துறை பணிமனை உதவிப்பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன வட பகுதிப் பொறுப்பாளர் கரட்டாவா, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

நன்றியுரையை சமாச உபதலைவர் செ.வ.செபநாயகம் ஆற்றினார்.

இந்த நிகழ்வில் அங்கத்துவ சங்கப் பிரதிநிதிகள், சமாசப் பிரதிநிதிகள், பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (21)

# கமவீதி மதவுகளை புனரமைக்க நாவற்காடு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு

முள்ளியவளை நாவற்காடு கமவீதி மதகுகள் உடைந்த நிலையில் காணப்படுவதால், இந்தப் பகுதி மாணவர்கள் பாடசாலை செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


இந்தக் ஹம்பகா வீதியானது - புனரமைப்பு செய்யப்பட்டபோதும், அதற்காக அமைக்கப்பட்ட இரு மதகுகள் பாதுகாப்பற்ற நிலையில் அமைக்கப்பட்டதால், மழை வெள்ளத்தின்போது மதகுக் குழாய்கள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதால், அந்த இடம் ஆழமான குழியாக நீர் நிறைந்த நிலையிலுள்ள இந்தப் பாதையூடாக சுமார் 50 இற்கும் மேற்பட்ட மாண வர்கள் பாடசாலைக்குச் செல்லும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. சிறுவர்கள் நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்து தத் தளித்து காப்பாற்றப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றது.

இந்தப் பகுதி மாணவர்கள் வேறு பாதையூடாக பாடசாலை செல்வதாயின் சுமார் மூன்று மீற்றர் தூரம் சுற்றிச் செல்லவேண்டும். அந்தப் பகுதியிலுள்ள மாணவர்கள் அநேக மானவர்கள் வறுமை நிலையில் உள்ளவர்கள்.

இவர்களுக்குப் போக்குவரத்து அற்றநிலையில் இந்த மாணவர்களின் அவலநிலையைக் கருத்திற் கொண்டு இந்த வீதியை பூரணமாகப் புனரமைத்துப் பலமான மதகுகள் அமைத்து மாணவர்கள் கற்றலுக்குச் செல்ல உதவுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# போர்ப் பயிற்சிக் கல்லூரியில் மாவீரர்கள் நினைவு நிகழ்வு!





கிளிநொச்சி

2 ஆம் லெப்.மாலதி படையணி பங்குபற்றிய பல்வேறு தாக்குதல்களில் தைமாதம் வீரச்சாவைத் தழுவிய 84 மாவீரர்களின் நினைவு நிகழ்வு உணர்வுபூர்வமாக நேற்று முன்தினம் மாலதி படையணியின் போர்ப் பயிற்சிக் கல்லூரியின் லெப் கேணல் மதி மண்டபத்தில் நடைபெற்றது.

தேசியக் கொடியை மாலதி படையணியின் போர்ப் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர் தமிழ்ப்புயல் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை மாலதி படையணியின் மாவீரர் மண்டபப் பொறுப்பாளர் நாமகள் ஏற்றிவைத்தார். மலர் மாலையை போர்ப் பயிற்சி ஆசிரியர் தமிழரசி அணிவித்தார்.

தொடர்ந்து மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல் யாழினி மாவீரர்களின் நினைவுரையை நிகழ்த்தினார். தொடர்ந்து மாவீரர்களின் நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

# வவுனியா மாவட்ட உணவகங்களின் சுகாதார பரிசோதனைக் குழு அமைப்பு

வவுனியா

வவுனியா நகரில் உள்ள உணவகங்கள், தேனீர் சிற்றுண்டிச் சாலை, மருந்தகங்கள் மீதான திடீர் சுகாதாரப் பரிசோதனை நடவடிக்கை தொடர்பாக சுகாதாரக்குழு அமைக்கப்பட் டுள்ளது என பிராந்திய உதவி உள் ஆணையாளர் சி.அச்சுதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - வவுனியா நகரில் பலசரக்கு கடைகள், சந்தை, பேக்கரி, இறைச்சிக்கடை என்பவற்றின் சுகாதார நிலைமையை அவதானிக்கும் வகையில், சுகாதார பரிசோதனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுகாதார திணைக்களம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் இணைந்து இந்தக் குழுவை அமைத்துள்ளனர். இதில் பிராந்திய தொற்றுநோயாளர் பிராந்திய உள்ளூர் திணைக்கள அதிகாரிகள், தொற்றுநோயியலாளர் பிராந்திய உள் ஆணையாளர், வவுனியா மற்றும் வவுனியா வடக்கு சுகாதார அதிகாரிகள், நகரசபை செயலாளர், மாவட்ட மேற்பார்வை பொதுப் பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் இடம்பெற்றனர். இந்தக் குழுவினர் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு சுகாதாரத்துக்கு கேடான உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் உள்ளனர். இந்தப் பரிசோதனைகள் மருந்தகங்கள் மற்றும் கடைகள், விடுதிகளுக்கு விஸ்தரிக்கப் படவுள்ளதாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

# பற்சிகிச்சை முகாம்

மட்டக்களப்பு

தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் காயான்மடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பற்சிகிச்சை முகாம் நடைபெற்றது. பல் வைத்திய நிபுணர் டொக்டர்.காந்தினி, பொதுச் சுகாதார பரிசோதகர், பிரதேச சுகாதார பரிசோதகர், பிரதேச சுகாதார இணைப்பாளரான மு.சதீஸ், அம்பாறை மாவட்ட இணைப்பாளர் யோகா ஆகியோர் பங்குபற்றினர். சுமார் எண்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பற்சிகிச்சை நடைபெற்றது.

# போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பு

மட்டக்களப்பு

காத்தான்குடி சமூக மற்றும் கல்வி மேம்பாட்டுக்கான அமையம் இஸ்லாமிய புதுவருடத்தை முன்னிட்டுக் காத்தான்குடிப் பிரதேச பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா நேற்றுமுன்தினம் காத்தான்குடியில் நடைபெற்றது.

காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை டொக்டர் அஹமட் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும் இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராகக் பள்ளிவாசல் சம்மேளனப் பிரதித் தலைவர் ஏ.எல்.அப்துல் ஜவாத், பிரதேச கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.அப்துல்லத்தீப், தேசியக் கல்லூரி அதிபர் யூ.எல்.எம் மஹ்ரூப், மாவட்ட வைத்திய அதிகாரி ஐ.எல்.எம் றிபாஸ், சர்வதேச முன்னெச்சரிக்கை அமைப்புத் திட்டமுகாமையாளர் கே.எம்.நவாஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கொத்தியாபுலை கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பம்!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் மக்களுக்குத் தற்காப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் கொத்தியாபுலை கிராம மக்களுக்கான பயிற்சிப் பிரதேசப் பொறுப்பாளர் சக்தி தலைமையில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத் தில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரைப் பன்சேனைப் பிரதேசப் பொறுப்பாளர் முக்கனி ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை மாவடிமுன்மாரிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகளை மாவடிமுன்மாரி அரசியற்துறைப் பொறுப்பாளர் தீபன் ஆரம் பித்து வைத்தார். நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு தற்காப்புப் பயிற்சிகளைப் பெற்றனர். இந்த நிகழ்வில் போராளிகள், மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# உருத்திரபுரம் - ஆரோபணம் சிறுவர் இல்லத்துக்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் தளபாடங்கள்

கிளிநொச்சி

கிளிநொச்சி - உருத்திரபுரம் பகுதியில் இயங்கி வரும் ஆரோபணம் சிறுவர் இல்லத்துக்கு கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தால் பல லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளதாக நிறுவன இயக்குனர் கி.யோ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நிறுவன பிரதிநிதிகளால் 75 கதிரை, மேசைகள், 25 கட்டில்கள், 25 மெத்தைகள், 22 உலோக அலுமாரிகள் என சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை இந்த நிறுவனத்தால் சிறுவர் இல்லத்துக்கான மின் பிறப்பாக்கி அறை ஒன்றும் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 86 சிறுவர்கள் ஆரோபணம் சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

# றோமன் கத்தோலிக்க பாடசாலையின் புதிய வகுப்பறைக் கட்டட திறப்பு விழா

மன்னார்

சுனாமி மற்றும் இராணுவத் தாக்குதலால் சேதமடைந்த மன்னார் அளம்பில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் புதிதாகக் கட்டப்பட்ட வகுப்பறைக் கட்டடம் மற்றும் நூலகக் கட்டடத் திறப்புவிழா - கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் இ.நேவிற் ஜீவராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை அளம்பில் பங்குத் தந்தை யூட் அமலதாஸ் அடிகளார், முல்லைத்தீவு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சிவராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் அளம்பில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றிவைத்தார்.

பாடசாலைக் கொடியை அதிபர் இ.நேவிற் ஜீவராசா ஏற்றி வைத்தார். நூலகக் கட்டடத்தைப் பங்குத் தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் திறந்து வைத்தார். வகுப்பறைக்கான புதிய கட்டடத்தை சிவராசா திறந்து வைத்தார். வரவேற்புரையை ஆசிரியர் நவநீதன் நிகழ்த்தினார்.

தலைமையுரைத் தொடர்ந்து கருத்துரைகளை அளம்பில் கிராம அலுவலர் வி.அமிர்தராஜினி, குமுழமுனை வலயப்பொறுப்பாளர் பரிதி, பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார், பாடசாலை அபிவிருத்திக் குழு சார்பாக மோகன்ராஜி, வலயக் கல்விப் பணிமனை தொழில்நுட்ப உத்தியோகத்தர் குலசூரியர் ஆகியோர் நிகழ்த்தினார்கள். சிறப்புக் கருத்துரையை சிவராசா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், போராளிகள், கிராம அலுவலர்கள், சோஆ, நிறுவன பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பாடசாலை அமைப்பதற்கான நிதியுதவியைப் புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு கல்வித்திணைக்களத்திடம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு
- திருக்குறள்

## நமது நோக்கு

# சமாதானத்துக்கு சமாதியா?

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 5 பணியாளர்கள் வெலிகந்தவில் வைத்துக் கடத்தப்பட்ட அதேவேளை, மேலும் ஆறுபேர் கிளிநொச்சிக்கு வரும்வழியில் காணாமற் போயிருக்கின்றனர். இவர்களும்கூடக் கடத்தப்பட்டதாகவே சந்தேகிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் இருந்து பயிற்சிப்பட்டறைகளில் பங்கேற்பதற்காக வந்தபோதே இவர்கள் கடத்தப்பட்டிருக்கின்றனர். சாதாரண - அப்பாவிப் பொதுமக்களான இவர்களின் கடத்தல் மிகவும் பாரதூரமான சம்பவமாகவே அவதானிக்கப்படுகிறது.

அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு அலுவலகம் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீதான இத்தகைய தாக்குதல்களும் சரி, பணியாளர்கள் கடத்தப்பட்ட சம்பவங்களும் சரி, அதன் செயற்பாடுகளை முடக்குவதற்கான சதியாகவே தெரிகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், புலிகளுக்கு நிதிசேகரிப்பதாக இலங்கை அரசு பல்வேறு குற்றச்சாட்டுக்களைக் கூறி- அமெரிக்காவில் தடைவிதிக்கக்கோரி பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறது. ஆனால், இந்த முயற்சிக்கு இதுவரை எந்தப் பயனும் கிடைக்காத நிலையில்தான்-

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கு எதிரான வன்முறைகள் ஆயுதக் குழுக்களின் மூலம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. குண்டு வீசுவது, பணியாளர்களைக் கடத்துவது, தாக்குவது போன்ற நடவடிக்கைளின் மூலம் - இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளை முடக்கவே முயற்சிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மிகப்பெரிய நிறுவனமாக இதுவே காணப்படுகிறது. வெளிநாட்டு நிதியுதவிகளைக் கொண்டு சுனாமி மீளமைப்பு முதல், யுத்த நடவழிக்கையில் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல், கண்ணிவெடிகளை அகற்றுதல், கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என இதன் செயற்பாடுகள் ஆலவிருட்சமாக வளர்ந்திருக்கிறது.

வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி மலையகத்திலும்கூட இதன் செயற்பாடுகள் அமைந்திருப்பதுடன், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும் உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

இப்படிப்பட்ட தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் கடத்தப்பட்டதும் சரி, குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதும் சரி - இலங்கைத்தீவில் உதவிப் பணிகளை மேற்கொண்டு வரும் உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களை அச்சுறுத்தலுக்குள்ளாகிவிட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட, வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கான உதவித்திட்டங்களைத் தடுப்பதும்- தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளை முடக்குவதும்தான் இத்தகைய நடவடிக்கைகளின் நோக்கமாகத் தெரிகிறது.

இதனூடே இலாபம் அடைந்துள்ள சக்திகள் நிச்சயமாக அரசாங்கத்துடன்தான் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகிலேயே இவர்கள் கடத்தப்பட்டிருப்பதும் - ஆயுதக் குழுவின் நடமாட்டமுள்ள பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதும் இதனைத் தெளிவுபடுத்துகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்றிருக்கும் இந்தச் சம்பவத்துக்கான முழுப்பொறுப்புமே அரசாங்கத்தைச் சாரும். ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என படைத்தரப்பு கைவிரித்திருக்கிறது.

ஜெனிவாவில் போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுகளுக்கு புலிகள் தயாராகிவரும் நிலையில் இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம் நிச்சயம் பெரும் நெருக்கடிகளை உருவாக்கும்.


தமிழர் தாயகப் பகுதிகளில் இயல்புநிலை ஏற்பட்டால்தான் பேச்சுவார்த்தை எனப் புலிகள் கூறியுள்ள நிலையில், இப்படிப்பட்ட கடத்தல் சம்பவங்கள், தாக்குதல்சம்பவங்கள், இராணுவக் கெடுபிடிகள் என்பன ஆரோக்கியமான பேச்சுக்களைத் தடைப்படுத்தக்கூடும்.

இத்தகைய செயல்கள் தொடர்பாக அரசாங்கம் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டியிருக்கின்ற அதேவேளை - இத்தகைய ஆத்திரமூட்டும் சம்பவங்களைத் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான வழிகளைத் தேடிக்கொள்ளவும் வேண்டும்.

அதுதான் நிரந்தர சமாதானத்துக்கு வழியைத் தேடிக் கொடுக்கும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# ஜெனிவா சமாதானப் பேச்சுக்களில் கண்காணிப்புக் குழுவும் பங்கேற்கும்

கொழும்பு —

ஜெனிவா பேச்சுக்களில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவரும் கலந்துகொள்வது முக்கியம் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம் குறித்து நடைபெறும் இந்த உத்தேச பேச்சுக்களில் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் கலந்துகொள்வதா இல்லையா என்பது பற்றிய தீர்மானத்தை அரசாங்கமும் விடுதலைப்புலிகளுமே அறிவிக்க வேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் அமுல்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் யோசனைகளும் முன்வைக்கப்படுதல் அவசியம் என நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சொல் ஹெய்முக்கு ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

இருதரப்பினரதும் நிறை குறைகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிந்துள்ளதால் பேச்சுவார்த்தைகளில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவரைக் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்றும் ஹக்ரப் ஹொக்லண்ட் கூறியுள்ளார்.

இதற்கு - பேச்சுவார்த்தைகளில் கண்காணிப்புக் மு உறுப்பினர் பங்கேற்பது தொடர்பாக அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியபின்னர் தெரிவிப்பதாக எரிக் சொல்ஹெய்ம் பதிலளித்துள்ளார்.

# பொதுஅறிவுப் போட்டி!

யாழ்ப்பாணம் —

மாணவர்களின் ஆங்கிலமொழிமூல வாசிப்புப் பழக்கத்தையும், தேடிக்கற்றலையும் ஊக்கப்படுத்தும் வகையில் வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்ச வீட்டுப் பாடசாலை அலகு பொது அறிவுப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி மேற்படி கல்லூரியில் பி.ப.1 மணிக்கு நடைபெறவுள்ள ஆங்கில மொழிமூலமான இந்தப் பொதுஅறிவுப் பரீட்சையில் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த க.பொ.த உயர்தர வகுப்புக்களைக் கொண்ட 26 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் எழுத்துமூலமான இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா இரண்டு மாணவர்கள் வீதம் இதில் கலந்து கொள்ளலாம். வெற்றி பெறுவோருக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் கோட்ட மட்டங்களில் தேசிய 1 ஏ பி, 1 சி தரப் பாடசாலைகள் என்றரீதியில் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் இடப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் வெளிச்ச வீட்டு பாடசாலை அலகுடன் தொடர்பு கொண்டு போட்டியில் பங்கேற்கலாம்.

# அழகியல் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்!

சுதுமலை —

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நுண்கலைப் பாடங்களைப் பதிவு செய்யும் நிகழ்வு எதிர்வரும் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம் பெறவுள்ளது.

டேவிற் வீதியிலுள்ள கலைக் கோட்டத்துக்கு விண்ணப்பித்த மாணவர்களை சமுகமளிக்குமாறு அழகியல் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

இதே வேளை எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வகுப்புக்கள் யாவும் ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (91)

# இரவு நேரப் படிப்பகம் திறந்து வைப்பு!

சுதுமலை —

கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தால் மாதகல் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இரவுநேர படிப்பக மண்டபம் கடந்த வாரம் நிறுவன இயக்குனர் கி.யோ.ஜெயக்குமார் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது.

மாதகல் புக்கைப்புலோ கிராமத்தில் சுமார் 5லட்சம் ரூபா செலவில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நிறுவன பிரதிநிதிகளுடன் அருட்தந்தை ஏ.சி.கிறிஸ்தோப்பர், அருட் சகோதரிகள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (91)

# சிறுவர் கலைப்பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்!

சுதுமலை —

திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூடம் - 2006 இற்கு 6 வயது முதல் 16 வயது வரையான சிறுவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக சிறுவர் கலைக்கூட பொறுப்பாசிரியர் தெரிவித்தார்.

சனி, ஞாயிறு தினங்களில் இலவசமாக நடத்தப்படவுள்ள பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

சிறுவர் ஆளுமையை வளர்த்தெடுக்கும் அரங்கச் செயற்பாடுகள், இசை, நடன, ஓவியப் பயிற்சிகள், கலைத்திறன் போட்டிகள், ஆளுமை வெளிப்பாட்டுக்குரிய அரங்கேற்றங்கள், உடல் ஆளுமைக்குரிய விளையாட்டுக்கள் ஆகிய பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

6 வயது முதல் 12 வயது வரையானவர்களை பிரிவு - 01 இலும் 12 வயது முதல் 16 வரையானவர்களை பிரிவு 02 பயிற்சிநெறியில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக பொறுப்பாசிரியர் மேலும் தெரிவித்தார். (91)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு எதிராக பவ்ரல் அமைப்பு வழக்கு தாக்கல்!

கொழும்பு —

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்கால குறைப்பை எதிர்த்து பவ்ரல் அமைப்பின் சார்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

17 உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் எதிர்வரும் ஏப்ரல் 14ஆம் திகதி காலாவதியாகும் என்று கடந்த ஜனவரி 16ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளின் அமைச்சர் வர்த்தமானி அறிவித்தலை விடுத்திருந்தார்.

இது பாரபட்சமானது என்றும், வழமைக்கு மாறானது என்றும் பவ்ரல் அமைப்பு தனது மனுவில் தெரிவித்துள்ளது.

மேலும் 2004ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் கீழ் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதன் மூலம் பல லட்சம் பேர் வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிடும் என்றும் பவ்ரல் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சரின் ஜனவரி 16ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்தத் தடைவிதிக்க வேண்டும் என்றும் 2005ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் பவ்ரல் தனது மனுவில் கோரியுள்ளது.

பிராந்திய சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சரும் வர்த்தமானி அறிவித்தலை விடுத்திருந்தவருமான ஜனக பண்டார தென்னக்கோன், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளர் நாயகம் எச்.கே.கீதசேன ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.



# நீதியின் பொறுமை!

இலங்கை அரசாங்கத்துக்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுகள் இந்த மாதத்தில் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரத்தில் நடைபெறுமென்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடநத வாரம் நோர்வே நாட்டின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங் கைக்கு விஜயம் செய்தபோது சமாதானப் பேச்சுகள் குறித்துப் பரவலாக நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. தமிழரின் தேசியப் பிரச்சினையைக் குறித்த சமாதானப் பேச்சுகள் உடனே ஆரம்பமாகக்கூடும் என்றுதான் செய்திகளும், ஊடகங்களும் வெளியிடப்பட்டிருந்தன.

உலக நாடுகளும், அரசும் புரிந்துணர்வு ஒப்பந்த விதிமுறைகளை அமுலாக்குவதில் முதலில் சிரத்தை காட்ட வேண்டும் என் றும், குறிப்பாக தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய வேண்டும், இராணுவம் ஆக்கிரமித்துள்ள இடங்களிலிருந்து வெளியேற வேண்டும்,

தமிழ் பொதுமக்கள் மீது இராணுவம் மேற்கொண்டு வருகின்ற மனித உரிமை மீறல்கள், படுகொலைகள், பாலியல் பலாத்காரங்கள் நிறுத்தப்பட வேண்டும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்டபடி தமிழர் தாயகத்தில் தோன்றுவதற்குரிய சகல முயற்சிகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் போன்ற நடவடிக்கைகள் இடம்பெற வேண்டுமென பரவலாக வலியுறுத்தப்பட்டது.

பேச்சுக்களின் முதல் கட்டம் புரிந்துணர்வு ஒப்பந்த விதிகளின் அமுலாக்கம் பற்றியதாகவே அமைய வேண்டுமே தவிர வேறு எது பற்றியும்பேசுவதற்கு நாம் தயாராக இல்லை- என்று தமிழீழத் தேசியத் தலைமை தெளிவாகத் தெரிவித்து விட்டது.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சீரிய அமுலாக்கம் குறித்து பேச்சுக்களை தொடங்கவிருக்கின்ற அவ்வேளையில் சில முக்கியமான விடயங்களைத் தர்க்கிப்பது பொருத்தமாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட உலக நாடுகள் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்கின்ற தேவையற்ற அறிக்கை அழுத்தங்களும், அரசியல் அழுத்தங்களும் ஒரு கட்டத்துக்கு மேல் செல்லுபடியாகாமல் போய்விடும்.

இன்று விடுதலைப் புலிகள் மீது வாய்ச்சொல் அழுத்தங்களை அமெரிக்கா உட்பட பல நாடுகள் மேற்கொண்டு வந்துள்ள போதிலும், யார் உண்மையில் அழுத்தங்களுக்கு ஆளாகி பணிய வேண்டிய நிலை வந்துள்ளது என்பது குறித்து ஆராய வேண்டியது அவசியமானதாகும்.

இலங்கை புதிய ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் தெரிவித்த கருத்துகளுக்கும், மேற்கொண்ட செயற்பாடுகளுக்கும் உள்ள வேற்றுமைகளை சிறிது கவனிப்போம்.

-சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணையாளர்களாக நோர்வே வரக் கூடாது என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். நோர்வேதான் அனுசரணையாளராக வரவேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

ஈற்றில் நோர்வேதான் அனுசரணையாளராக வந்துள்ளது.

-பேச்சுக்கள் இலங்கையில் மிஞ்சிப் போனால் ஜப்பான் போன்ற ஆசிய நாடொன்றில்தான் ஆரம்பமாக வேண்டும் என்று அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இப்போது ஐரோப்பிய நாடான சுவிட்சலாந்தில் பேச்சுக்கள் ஆரம்பமாக உள்ளன.

- புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாற்றவேண்டும் - மறு சீரமைக்க வேண்டும் என்றெல்லாம் மகிந்த முழக்கமிட்டு வந்தார். ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாற்ற முடியாது. மாறாக அதனை முறையாக அமுல்படுத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தீர்க்கமாகத் தெரிவித்தார்கள்.

இப்போது ஏற்கனவே எற்றுக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறையாக அமுல்படுத்துவது குறித்தே பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

அதாவது ஆயிரம் அழுத்தங்களை உலக நாடுகள் விடுதலைப் புலிகள் மீது திணிக்க முயன்றாலும், ஈற்றில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டின் படியேதான் நோர்வேயின் அனுசரணையுடன் ஐரோப்பிய நாடொன்றில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறையாக அமுலாக்குவது குறித்து பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

எனவே, ஒரு கட்டத்துக்கு மேல் புலிகள் மீதான அழுத்தங்கள் என்பது செல்லுபடியாகாமல் போய்விடும் என்பதை நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

இதேவேளையில் திரைமறைவுச் சம்பவங்கள் என்று நாம் கருதுகின்ற, ஊகிக்கின்ற சில விடயங்களைத் தர்க்கிக்க விளைகின்றோம்.

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வெளிப்போக்காக இலங்கை அரசுகளுக்கான ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து வந்திருந்தாலும், அவை உண்மை நிலையை, யதார்த்த நிலையை உணர்ந்தே உள்ளன. எது நீதி, எது அநீதி என்று உலக நாடுகளுக்கு உள்ளுரத் தெரியும்.

தமது சொந்த நலன் கருதி அநீதியின் பக்கம் நின்று கொண்டிருந்தாலும் இது நெடுங்காலத்துக்கு நீடிக்க முடியாது என்பதையும் உலக நாடுகள் அறியும். அடிப்படையில் பேச்சுக்கள் ஊடாக சமாதானத் தீர்வு ஒன்று வரவேண்டும் என்று உலக நாடுகள் விரும்புகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கள் ஊடான உரிய சமாதானத் தீர்வை மறுக்கவில்லை என்பதையும் உலக நாடுகள் அறியும். ஆனால், சிங்கள தேசமானது தானும் குழம்பி சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் தொடர்ந்து குழப்பி வருகின்ற உண்மையையும் இந்த உலக நாடுகள் அறியும். இந்த வேளையில் சில செய்திகள் இலங்கையின் புதிய ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவுக்குச் சொல்லப்பட்டிருக்கலாம் என்று நாம் ஊகிக்கின்றோம்.

இந்த கள யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவும், அமெரிக்காவும் சில விடயங்களை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு வலியுறுத்தியுள்ளதாக நாம் ஊகிக்கின்றோம். அதனால் தான் வெறுங் கைகளோடு இந்தியாவிலிருந்து ஜனாதிபதி ராஜபக்ஷவும், அமெரிக்காவிலிருந்து அமைச்சர் மங்கள சமரவீரவும் திரும்பி வந்தார்கள்.

அந்த வெறும் கைகளை நிரப்ப வேண்டும் என்ற பரிதாபத்தின் மூலம் தான் அமெரிக்கத் தூதுவர்கள் சில வாய்ச் சவால்களைச் சமீபத்தில் தெரிவித்திருந்தார்கள். பனங்காட்டு நரிகளே சலசலப்புக்கு அஞ்சாத போது பனங்காட்டுப் புலிகள் எவ்வாறு அஞ்சும்? எனினும் யதார்த்த நிலையை உலக நாடுகளும் உணர்ந்துகொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் முறையாக அமுலாக்கப்படவேண்டிய அவசியத்தைப் புரிந்துகொண்டு, அதற்குரிய பேச்சுக்களுக்கான தளத்தை அமைத்திருக்கின்றன.

இந்தவேளையில் கசப்பான ஓர் உண்மையை நாம் சொல்லிவைக்க விளைகின்றோம். இன்று போர்ச் சுழல் உருவாகியதற்கான அடிப்படைக் காரணமே புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலாக்கப்படாமல் போனது தான்.

இந்த மாதத்தில் ஜெனிவாவில் நடைபெறப் போகின்ற பேச்சுக்களின் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்த அமுலாக்கத்தில் நியாயமான இணக்கப்பாடு வராதபட்சத்தில் மிகப் பெரிய சிக்கல் உருவாக வாய்ப்பிருக்கின்றது.

இது நிலைமையை மேலும் மோசமாக்க வைப்பதுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதிர்காலத்தில் ஒருபோதும் நிகழ முடியாத இறுக்கமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். எமது அச்சத்தை உறுதி செய்யும் விதமாக மட்டக்களப்பு வடமுனைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி மேஜர் கபிலனை இராணுவமும், ஒட்டுப் படைகளும் ஒழிந்திருந்து தாக்கிக் கொன்றிருக்கிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறையாக அமுலாக்குவது குறித்துப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசு இணங்கியதற்கு அடுத்த நாளே இந்தக் கொலை நடந்திருப்பதானது இலங்கை அரசின் நேர்மையை மீண்டும் கேள்விக்குரியதாக்கியுள்ளது. இதனை இணைத்தலைமை நாடுகளும் கண்டித்திருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் நிலைமையை மேலும் மோசமாக்குவதற்கே வழிவகுக்கும்.

இந்த வேளையில் எம்முடைய இன்னுமொரு கருத்தையும் சொல்லிவைக்க விளைகின்றோம். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறையாகச் செயற்படுத்துவது குறித்து இன்னுமொரு புரிந்துணர்வைப் பெற்றுக் கொண்டு அதனை முறையாகவும் அமுலாக்க வேண்டும்.

அதன் பின்னர் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்குரிய தீர்வை காண்பதற்கான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும். இந்தப் புதிய சமாதானப் பேச்சுக்கள் முறையான வகையில் நகரவேண்டும். இவற்றை இதயசுத்தியுடன் முன்னெடுப்பதற்கு சிங்கள தேசம் முன்வரவேண்டும்.

ஆனால், சிங்கள தேசமோ அதன் அரசோ சமாதானப் பேச்சுக்களூடாக தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையைத் நியாயமான முறையில் தீர்க்க முன்வருமென்று நான் நம்பவில்லை. சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளுடன் நடத்துகின்ற சமாதானப் பேச்சுக்கள் சரிவரமாட்டாது என்பதை சகலரும் முழுமையாக விளங்கிக் கொள்ளும் காலம் விரைவில் வரக்கூடும்.

ஒருகட்டத்துக்கு மேல் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. நியாயமான தீர்வை நெடுங்காலமாக எதிர்பார்த்து நிற்கின்ற தமிழ் மக்கள் அதிகமான பொறுமை- அநீதிக்குத்தான் வழிவகுக்கும் என்று பொங்கி எழவும் கூடும். அந்த மக்கள் எழுச்சி இதுவரை காலமும் தமிழினம் கண்ட காட்டிய எழுச்சிகளையும்விட பேரெழுச்சியாக எழுவது தான் காலத்தின் கட்டாயமாகவும் அமையப்போகிறது.

நீதியின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. அப்பொழுதுதான் நீதி நீதியாகச் செயலாற்றமுடியும்.

சபேசன்
(அவுஸ்திரேலியா)

# லஞ்சமில்லாத நிர்வாகத்தை புலிகள் நடத்துகின்றனர்!

**விடுதலைப்புலிகளின் ஆளுகைப் பகுதிக்கு விஜயம் செய்த ரொய்ட்டர் செய்தியாளர் ரா.கோபால கிருஷ்ணன் அங்குள்ள நிர்வாக நடைமுறைகள் குறித்து வியந்து பாராட்டி எழுதியுள்ள கட்டுரை இது -**

இலங்கையில் கிளிநொச்சி மிகச் சிறிய பகுதி. கிளிநொச்சி வீதியில் கடைகள், சிறு வீடுகள், அரச கட்டடங்கள் வரிசையாகவுள்ளன.

ஆனால் பஸ்கள் நிதானமாக, மெதுவாக கிளிநொச்சிக்குள் பயணிக்கின்றன. வாகன ஒழுங்குவிதிகளை மீறுவோருக்கு அந்த இடத்திலேயே தண்டத் தொகை விதிக்கப்படுகிறது. எதுவித விவாதமும், லஞ்சமும் அங்கு இல்லை.

உலகத்திலேயே மிக ஒழுக்கமான கெரில்லா இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தும் நிழல் அரசாங்கத்தின் தலைமையகம் இங்குதான் உள்ளது.

கனரக ஆயுதங்களுடன் இருக்கும் கெரில்லாக்களும், அவர்களது காவல் துறையினரும் வெளிநபர்களுடன் கதைக்க விரும்புவதில்லை. வெப்பம் அதிகமாக இருந்த ஒரு நாளில் வியர்வை வடிந்து கொண்டிருந்த ஒரு இளநிலை பெண் காவல்துறை பணியாளரிடம் நீர் அருந்துகிறீர்களா என்று கேட்டோம். சிறிய புன்னகையை உதிர்த்துவிட்டு ஆங்கிலத்தில் நன்றி தெரிவித்துவிட்டு நகருங்கள் என்றார்.

தென்பகுதியில் உள்ள கொழும்பிலிருந்து வருகின்றவர்களுக்குக் கடவுச் சீட்டு போன்ற நுழைவுச் சீட்டு வழங்கப்படுகிறது.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் சொந்த வங்கி , நீதிமன்றம், மருத்துவமனை, வாகனசேவை உள்ளன.

கொழும்பை விட அரை மணி நேரம் வித்தியாசம் கொண்ட தனியான நேரக் கணக்கீடும் கடைபிடிக்கப்படுகிறது.

இலங்கை மின்தொகுப்புடன் கிளிநொச்சி நகரம் இணைக்கப்படுள்ளது. விடுதலைப் புலிகள் அதற்கான தொகையைச் செலுத்துகின்றனர். தரைவழித் தொலைபேசி சேவைகளும் அப்படித்தான். கையடக்க பேசிகள் இயங்குவதில்லை.

கணினிகள் மீதான ஆர்வம் அதிகமாக இருக்கின்றன. இருப்பினும் வீடுகளுக்கான இணைய இணைப்புகளை புலிகள் தடை செய்துள்ளனர். புலிகளின் அலுவலகங்கள் மற்றும் இணைய மையங்களில் தான் இணைய பயன்பாடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் 1,000 இற்கும் மேற்பட்ட கணினிகள் இருக்கலாம் என்கிறார் நிசாந்தன் அலோசியஸ். கிளிநொச்சியில் 2 ஆண்டுகளுக்கு மேலாக கணினி நிறுவனத்தையும், இணைய மையத்தையும் நடத்தி வருகிறார்.

'ஒவ்வொருவரும் மின்சார வசதி பெற்றுள்ளமையால் கணினிக்கு நல்ல வரவேற்புள்ளது' என்கிறார் அவர்.

அவரது கணினி நிலையத்தில் யு.எஸ்.பி.ஹப்புகள், டி.வி.டி. வட்டுக்கான இயக்கி உள்ளிட்ட கணினி வன்பொருள்கள் உள்ளன. மாதத்துக்கு ரூபா 3 லட்சம் அளவில் விற்பனையாகிறது என்றார் அவர்.

வீடுகளில் இணைய இணைப்புக்கு ஏன் தமிழீழ விடுதலைப் புலிகள் தடை விதித்துள்ளனர் என்ற கேள்விக்கு நிசாந்தன் அலோசியஸ் அளித்த பதில்-

ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் கருதுகின்றனர். அதனால் வீடுகளுக்கான இணைய இணைப்புக்கு அனுமதி அளிக்கவில்லை. கணினி சேர்வர் ஊடாக இணையப் பயன்பாட்டை நாம் கண்காணித்து வருகிறோம் என்றார்.

அங்கு சிகரெட் தாராளமாக விற்பனை செய்யப்பட்டாலும் நிறைய எண்ணிக்கையிலானோர் புகைப் பிடிப்பதில்லை. இதற்கான காரணம் விடுதலைப் புலிகளின் போராளிகள் மது அருந்துவதும், புகைப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

ஒன்று அல்லது 2 மதுபானச் சாலைகள் உள்ளன. அங்கு பியர் மதுபானமும், வெளியிடங்களில் உள்ளூர் மதுபானமும் விற்பனை செய்யப்படுகின்றன. இருப்பினும் மிகச் சில உள்ளூர் நபர்களே அடிக்கடி அங்கு செல்கின்றனர்.

அடிப்படை வசதிகள் அனைத்தும் கொண்ட சிறு தங்கும் விடுதிகள் உண்டு. இரணைமடு நீர்த்தேக்கத்தை நோக்கிய விடுதியில் விடுதலைப்புலிகளின் விருந்தினர்களுக்கான அறைகள் முன்பதிவு செய்யப்படுகின்றன.



கடந்த இரு தசாப்தகால யுத்தத்தில் கிளிநொச்சி நகரம் கடுமையான செல் வீச்சுக்களுக்குள்ளானது. குறிப்பாக 1990 ஆம் ஆண்டு வன்னி வனப்பகுதியில் புலிகள் தளம் அமைத்திருந்த போது கிளிநொச்சி நகரம் கடும் சேதமடைந்தது.

கிளிநொச்சி வீழ்ந்துவிடவில்லை. ஆனால், பிரதான வீதியின் பல கட்டடங்கள் குண்டுத் தாக்குதல் அடையாளங்களுடன் கைவிடப்பட்டு இருக்கின்றன. அழிபாடுகளிலிருந்து கிளிநொச்சி கல்லூரியின் ஒரு பகுதி எஞ்சியிருக்கிறது. இதர வகுப்புகள் தென்னங்கீற்றுக் கூரைகளின் கீழ் நடைபெறுகின்றன.

இராணுவப் பயிற்சிகளைப் போன்ற உடற்பயிற்சிகள் இளைஞர்களுக்கு அந்த விளையாட்டு மைதானத்தில் அளிக்கப்பட்டு வந்தன.

பிரதான வீதியில் அனைவரது பேச்சுகளும் யுத்தம் பற்றியதாக இருந்தது.

குடும்பப் பெண்மணியான தெய்வானை மகேந்திரன் என்பவர் கூறுகையில் -யுத்தம் நடைபெற்ற காலங்களில் குடும்பம் நடத்துவது மிகக் கடினமானது என்றார்.

'இருப்பினும் எமக்கு யுத்த அச்சம் இல்லை. முன்னைவிட இயல்பான நிலைமை உள்ளது' என்கிறார்.

காய்கறிகள் விற்பனை செய்து வரும் ராஜ்குமார் என்ற 25 வயது இளைஞர் கூறுகையில் -அரசாங்கம் கிளிநொச்சி நகர் மீது மீண்டும் தாக்குதல் நடத்துமோ என்ற அச்சம் இருப்பதாகத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளும் - அரசாங்கமும் சுவிசில் பேச்சுவார்த்தை நடத்துவதாக அறிவித்திருந்தாலும் தீர்வு இன்னும் உருவாகவில்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமைதியாகத்தான் சென்று கொண்டிருந்தது. இந்த படுகொலைகள் அனைத்தும் அண்மையில் தான் நிகழ்ந்தன. உண்மையில் மிகவும் வருத்தமளிக்கின்றது என்றார்.

அப்படியான யுத்தம் வரும் நிலையில் நீங்கள் என்ன செய்வீர்கள் என்ற கேள்விக்கு 'நான் யுத்தத்துக்குச் செல்வேன்' என்றார். 'விடுதலைப் புலிகளோடு 4 ஆண்டுகள் இருந்துள்ளேன். கடந்த கடைசி யுத்தத்திலும் பங்கேற்றேன்' என்றார்.

எத்தனை இராணுவத்தினர் நீங்கள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டிருப்பார்கள் என்ற கேள்விக்கு சிரித்தவாறு பதிலளித்தார். 'என்னால் அதைக் கூற முடியாது' என்றார்.

# வெற்றி பெறப்போவது யார்?




சென்னை—

தமிழகத்தில் இதுவரை நடந்துள்ள தேர்தல்களை வைத்து அரசியல் கட்சிகளின் உண்மையான பலத்தைக் கணிப்பக சிரமம். காரணம், கூட்டணி அல்லது அரசியல் அலைகள்தான் வெற்றி தோல்வியைத் தீர்மானித்துள்ளன. 1989 ஆம் ஆண்டுதான் பெரிய கட்சிகள் அனைத்தும் தனித்துப் போட்டியிட்டன. அதிலும் அ.தி.மு.க. பிளவுபட்டு இரண்டு அணிகளாகப் போட்டியிட்டது.

எனவே, இந்த தேர்தலை வைத்து அ.தி.மு.கவின் பலத்தைக் கணிக்க இயலாது. மேலும், இந்தத் தேர்தலில் தி.மு.க மற்றும் காங்கிரஸ் கட்சிகள் தனித்துப் போட்டியிட்டாலும் ம.தி.மு.க, பா.ம.க. ஆகிய கட்சிகள் அப்போது இல்லை.

அதன் பின் 1991இல் ராஜீவ் காந்தி படுகொலை காரணமாகவும், 1996ல் ஆளுங்கட்சி மீது மக்களுக்கு இருந்த கடும் அதிருப்தி காரணமாகவும் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதனால் இந்தத் தேர்தல்களின் முடிவுகளை வைத்து அரசியல் கட்சிகளின் பலத்தைக் கணிக்க இயலாது. 1996ல் பா.ம.க. தனித்துப் போட்டியிட்டு 10 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுள்ள போதிலும், அதே வாக்கு வங்கி இப்போதும் அந்தக் கட்சிக்கு உள்ளதா என்பது சந்தேகமே.

காரணம், பா.ம.கவின் செயற்பாட்டில் வன்னியர்களுக்கு ஏற்பட்ட அதிருப்தி அந்தக் கட்சியில் பல்வேறு கட்டங்களில் ஏற்பட்ட பிளவு போன்றவற்றால் அதன் வாக்கு வங்கி குறைந்திருக்க வாய்ப்புள்ளது. அதேபோல, ம.தி.மு.க. 1996 இல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டணி வைத்தும், அதன்பின் 2001 இல் தனித்தும் போட்டியிட்டது. இந்தக் கட்சிக்கு என குறைந்தது ஐந்து சதவீத வாக்குகள் தமிழகத்தில் உள்ளது. எனவே, 1996 ஆம் ஆண்டுக்குப் பின் நடந்த நாடாளுமன்றம் மற்றும் சட்டசபைத் தேர்தல்களில் கூட்டணி காரணமாகவே அ.தி.மு.க வெற்றிபெற்றது.

அதே போல, 2004 நாடாளுமன்றத் தேர்தலிலும் கூட்டணிப் பலத்தால் தி.மு.க வெற்றி பெற்றது. எனவே, வரும் தேர்தலில் கூட்டணிப் பலம் தி.மு.கவுக்கு கைகொடுக்கும்.

எனினும், அ.தி.மு.க அரசு மீது பெரிய அளவில் அதிருப்தி காணப்படாததாலும், தி.மு.க கூட்டணியில் நிலவிவரும் குழப்பங்களும் தேர்தல் முடிவில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் கடந்த ஆண்டு நிலவரப்படி மொத்தம் நான்கு கோடி 73 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இதில் இரண்டு கோடி 80 லட்சம் பேர் தான் வாக்களிப்பவர்கள். இவர்களில் அ.தி.மு.கவுக்கு 85 லட்சம் வாக்குகள் உள்ளன.

கடந்த 2004 நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா ஆதரவுடன் அ.தி.மு.க பெற்ற வாக்குகள் இவை. தி.மு.கவுக்கும் இதே அளவிலான வாக்குகள் உள்ளன. கடந்த 2001 தேர்தலில் பாரதீய ஜனதா ஆதரவுடன் தி.மு.க. பெற்ற வாக்குகள் இவை.

எனவே, இரண்டு கட்சிகளும் தனித்துப் போட்டியிட்டும் நிலையில், அப்போதுள்ள நிலவரம் தான் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும்.

இந்த நிலையில் தற்போது அ.தி.மு.க இன்னும் கூட்டணியை முடிவு செய்யாமல் உள்ளது. பாரதீய ஜனதாவை கூட்டணியில் சேர்ப்பது பற்றி இதுவரை ஜெயலலிதா தரப்பிலிருந்து எவ்வித சமிக்ஞையும் வரவில்லை. அதேபோல் விஜயகாந்த் கட்சி, திருமாவளவன் கட்சி, கிருஸ்ணசாமி கட்சி போன்ற கட்சிகளைக் கூட்டணியில் சேர்ப்பது பற்றியும் இதுவரை பேச்சுக்கள் நடத்தப்படவில்லை.

ஆனால், தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ், ம.தி.மு.க, பா.ம.க மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கட்சிகளுக்கென ஓரளவு வாக்கு வங்கியுள்ளது. எனினும், தொகுதிப் பங்கீடு விவகாரத்தில் இந்தக் கூட்டணிக்குள் பிரச்சினைகள் உருவாக வாய்ப்புள்ளது.

இதனால் கூட்டணி கட்சியினர் முழுவீச்சில் தி.மு.கவுக்கு ஆதரவாக செயற்படுவார்களா என்பது சந்தேகமே. தலைவர்கள் தொகுதியை பகிர்ந்து கொண்டாலும் தொண்டர்கள் கட்டுப்பாட்டுடன் தேர்தல் பணிகளில் ஈடுபடுவார்களா என்ற சந்தேகம் தி.மு.கவுக்கே உள்ளது.

இது தவிர ஆளுங்கட்சியாகவுள்ள அ.தி.மு.க அனைத்துவித பலத்துடன் தேர்தலைச் சந்திக்கவுள்ளது. இதுதவிர வாக்குச்சாவடிகளில் இதர கட்சிகளின் முகவர்களை விலைக்கு வாங்கவும் முயற்சி மேற்கொள்ளும். தேர்தலுக்கு மட்டும் தொண்டர்களைப் பயன்படுத்தும் கட்சிகளில் அவர்கள் விலைபோக வாய்ப்புள்ளது.

கடந்த நாடாளுன்றத் தேர்தலில் பலம் வாய்ந்த கூட்டணியை தி.மு.க அமைத்த போதிலும் தன்னையும் ஆளுங்கட்சி என்ற அதிகாரத்தையும் பெருமளவில் நம்பி ஜெயலலிதா களம் இறங்கினார். இதனால் மக்களுக்கு அறிமுகமில்லா வேட்பாளர்களை அ.தி.மு.க களமிறக்கியது. ஆளுங்கட்சி மீதிருந்த அதிருப்தி தவிர வேட்பாளர்கள் தேர்வும் அக்கட்சியின் தோல்விக்கு வழிவகுத்தது.

எனவே, வரும் தேர்தலில் வேட்பாளர் தேர்வு முக்கிய பங்கு வகிக்கவுள்ளது. இதனால் கூட்டணி உறுதி செய்யப்பட்டு, தொகுதிப் பங்கீடு சுமுகமாக முடிந்தாலும் வேட்பாளர் அறிவிக்கப்பட்டபின் நிலவும் நிலைமையை வைத்தே வெற்றி தோல்வியைக் கணிக்கமுடியும்.

# நகைச்சுவை நடிகர் செந்தில் அ.தி.மு.கவில் இணைந்தார்

சென்னை—

தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் நகைச்சுவை நடிகர் செந்தில் நேற்று அ.தி.மு.கவில் இணைந்தார்.

மேலும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து தி.மு.க, காங்கிரஸ், பா.ம.க, பாரதீய ஜனதா, ம.தி.மு.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், நிர்வாகிகள், உள்ளிட்ட 3,218 பேர் அந்தக் கட்சிகளிலிருந்து விலகி அ.தி.மு.கவில் இணைந்தனர்.

மொரப்பூர் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த 36 மகளிர் சுய உதவிக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் 638 பெண்கள் அ.தி.மு.கவில் சேர்ந்தனர்.

சென்னை-காயிதே மில்லத் மகளிர் கல்லூரி பேரவை நிர்வாகிகள் மற்றும் சென்னையில் பல்வேறு கல்லூரிகளில் பயிலும் 500 மாணவர்களும், சாத்தான்குளம் தி.மு.க. ஒன்றிய இளைஞர் அணி இணை அமைப்பாளர் செல்வக்குமார், துணை அமைப்பாளர் கைலாசம், நாசேரத் சிறப்பு ஊராட்சி இளைஞர் அணி அமைப்பாளர் பொன்சேகர், துணை அமைப்பாளர் டானியல் சுதாகர், ம.தி.மு.க மாவட்ட மாணவர் அணி செயலாளர் மாமல்லன், சாத்தான்குளம் வட்டார காங்கிரஸ் தலைவர் பட்டுதுரை உட்பட 150 பேரும் -

சோளிங்கர் தொகுதி ம.தி.மு.கவைச் சேர்ந்த வேலு, பா.ம.க. செயற் குழு உறுப்பினர் சண்முகம் உட்பட 100 பேரும் அ.தி.மு.கவில் இணைந்தனர்.

கோவை மாவட்ட தி.மு.க இளைஞர்அணி துணை அமைப்பாளர் சம்பத்குமார், பா.ம.கவைச் சேர்ந்த முருகவேல், கவுண்டம் பாளையம் நகர காங்கிரஸ் பொதுச் செயலாளர் மணி, மாவட்ட துணைத் தலைவர் வேங்கடேஷ் உட்பட 100 பேரும், திருவெற்றியூர் நகர 15 ஆவது வட்டார ம.தி.மு.க செயலாளர் முத்துக்குமார், 17 ஆவது வட்டார ம.தி.மு.க செயலாளர் மதியழகன், தி.மு.கவைச் சேர்ந்த பழனி, பூந்தமல்லி, வட்டார காங்கிரஸ் துணைத் தலைவர் வேணுகோபால் உள்ளிட்ட 400 பேரும் அ.தி.மு கவில் சேர்ந்தனர்.




# தமிழக சட்ட சபைத் தேர்தலில் ம.தி.மு.கவுக்கே இம்முறை மவுசு!



சென்னை—

தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.கவின் கை இப்போது ஓங்கியுள்ளது. கடந்த முறையைப் போல் பா.ம.கவுக்கு முதலில் தொகுதிகளை ஒதுக்காமல், இந்த முறை கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஆறுகட்சிகளுக்கும் ஒரே நேரத்தில் தொகுதிகளைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை ம.தி.மு.க முன்மொழிந்துள்ளது.

தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளைத் தக்கவைக்கும் முயற்சியில் கருணாநிதி தீவிரமாக இறங்கியுள்ளார். அதிருப்தி நிலவும் இடத்தில் அதைச் சரிசெய்யும் முயற்சியில் அவர் ஈடுபட்டும் வருகிறார்.

கூட்டணி அரசியலைப் பொறுத்தவரை இதுவரை பந்திக்கு முந்தும் கட்சியாக பா.ம.க இருந்து வந்துள்ளது. பா.ம.க கடந்த91,96ம் ஆண்டு தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டது. அதன்பிறகு நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் கூட்டணி அமைத்து மற்ற கட்சிகளின் முதுகில் சவாரி செய்யத் தொடங்கிவிட்டது.

பா.ம.க 98ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்தது. அப்போது அ.தி.மு.ககூட்டணியில் ம.தி.மு.கவும் இடம்பெற்றது. இந்த இரண்டு கட்சிகளுக்கும் தலா ஐந்து நாடாளுமன்றத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

பா.ம.கவும், ம.தி.மு.கவும் சமமாக அப்போது கருதப்பட்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டாலும் அடுத்ததாக 99 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தி. மு.கவுடன் இந்தக் கட்சிகள் கூட்டணி வைத்தபோது பா.ம.க முந்திக் கொண்டது. முதலில் பா.ம.கவுக்கு கூடுதல் ஆசனம் ஒதுக்கப்பட்டு ம.தி. மு.க. பின்னுக்குத் தள்ளப்பட்டது.

2001ம் ஆண்டு பா.ம.க அணி மாறி அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்தது. அப்போதும் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளையும் முந்திக்கொண்டு முதலில் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டு பந்திக்கு முந்தியது. மற்றக் கட்சிகள் எஞ்சியுள்ள இடங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

2004ஆம் ஆண்டு தி.மு.க அணிக்குத் தாவியபோது அதே பாணியை பா.ம.க. கடைப்பிடித்தது.

இந்த அணுகுமுறையால் பாதிப்பைச் சந்தித்துவிடக்கூடாது என்பதில் ம.தி.மு.க இம்முறை எச்சரிக்கையாக உள்ளது. கடந்த சட்டசபைத் தேர்தலில் பா.ம.க 27சட்டசபைத் தொகுதிகளில் போட்டியிட்டு 15லட்சத்து 57 ஆயிரத்து 500வாக்குகளைப் பெற்றது. இது மொத்த வாக்குகளில் 5.63 சதவீதம்.

ஆனால், இதில் கூட்டணிக் கட்சிகளான அ.தி.மு.க, த.மா.கா, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க் சிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளின் வாக்குகளும் அடங்கும். ஆனால், கடந்த சட்ட சபைத் தேர்தலில் ம.தி.மு.க 211தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு 12லட்சத்து 35ஆயிரத்து 30வாக்குகளைப் பெற்றது. ம.தி.மு.க பெற்ற வாக்கு 4.47 சதவீதமாகும்.

கூட்டணிக் கட்சிகளின் அனைத்து வாக்குகளையும் சேர்த்து பா.ம.கவால் 5.63 சதவீத வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது. ஆனால், ம.தி.மு.க. தனித்து நின்று 4.47சதவீத வாக்குகளைப் பெற்றது. இதிலிருந்தே இந்தக் கட்சிகளின் வாக்கு வங்கி நிலவரத்தை தெரிந்து கொள்ள முடியும்.

வட மாவட்டங்களில் 60சட்ட சபைத் தொகுதிகளில் மட்டுமே வாக்கு வங்கியைப் பெற்றுள்ள பா.ம.க ஒவ்வொரு முறையும் வெற்றிபெறும் அணியில் இடம் பிடித்துக்கொண்டு தங்களால் வெற்றி கிடைப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி விட்டது.

ஆனால், தமிழகம் முழுவதும் 200க்கு மேற்பட்ட தொகுதிகளில் வாக்குவங்கியை வைத்துள்ள ம.தி.மு.க தங்களுடைய செல்வாக்கை வெளியில் காட்டிக்கொள்ளாததால் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

ஆனால், இந்த முறை அந்தக் கட்சி ஏமாறத் தயாராக இல்லை. தங்களுக்கிருக்கும் செல்வாக்கை தி.மு.கவுக்கு புரிய வைப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

இதனால் தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.கவின் பேச்சு எடுபடத் தொடங்கியுள்ளது. அதைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தொகுதிப் பங்கீட்டில் பா.ம.கவுக்கு முன்னுரிமை கொடுக்காமல் காங்கிரஸ் - ம.தி.மு.க, பா.ம.க, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய யூனியன், முஸ்லிம் லீக்கட்சி ஆகிய ஆறு கட்சிகளுக்கும் ஒரே நேரத்தில் தொகுதிகளைப் பங்கிட வேண்டும் என்ற கோரிக்கையை அந்தக் கட்சி முன் வைத்தது.

இந்த முறை அதிக மதிப்பைப் பெற்றுள்ள கட்சியாக ம.தி.மு.க வளர்ந்துள்ளதால் அந்தக் கட்சியின் கோரிக்கையை ஏற்று ஒரே நேரத்தில் தொகுதிப்பங்கீடு இருக்கும் என்றே கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.


## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்

## வழங்குனர்களைப் பதிவு செய்தல் - 2006

## REGISTRATION OF SUPPLIERS - 2006

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கொங்கிறீற் உற்பத்திப் பகுதிக்கும் யாழ் அலுவலகத்திற்கும் 2006 ஆண்டு காலப்பகுதிக்குத் தேவையான பின்வரும் பொருட்களையும் சேவையினையும் வழங்கக்கூடிய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருட்கள் :**

01. உடைந்த சல்லிக்கல் (Crushed Metal) ½" ¾
02. மணல்
03. மணல்காடு மணல்
04. முறுக்குக் கம்பிகள் (Tore Steel)
05. மென் உருக்குக் கம்பிகள் (M.S.Bars)
06. கட்டுக் கம்பிகள் (Binding Wire)
07. கட்டட வேலைக்கான உபகரணங்கள்
08. மின்சாரப் பொருட்களும் மின்சார உபகரணங்களும்
09. வாகன உதிரிப்பாகங்கள் (Mitsubishi Double Cab வாகனத்திற்குரியவை)
10. ரயர்களும் ரியூப்களும் (Tyre & Tubes)
11. துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
12. காகிதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருட்களும் - (Stationary and Office Requisites)
13. அலுவலகத் தளபாடங்கள்
14. கணனிப் பொருட்களும் உதிரிப் பாகங்களும் (Computer Spares)

**சேவை :**

01. வாகனம் பழுது பார்த்தல்
02. கணனி பழுது பார்த்தல்

மேற்கூறப்பட்ட பொருட்களையும் சேவையினையும் வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் 17.02.2006 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம், வழங்கப்படக்கூடிய பொருள், சேவை விபரம் கொண்ட விண்ணப்பத்தினை பின்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விநியோக உத்தியோகத்தர்,
இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்,
வேம்பன் ஒழுங்கை,
உரும்பிராய்.

தொலைபேசி இல : 021 222 2128

[C/5059]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்கள் விரோத செயல்களை உடனடியாக கைவிடவேண்டும்!

## படையினர், ஒட்டுக்குழுக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்

தமிழ்மக்களுக்கு எதிரான விரோதச் செயல்களில் ஈடுபடும் இராணுவத்தினரும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளும் உடனடியாகத் தமது நடவடிக்கைகளை கைவிடவேண்டும். இல்லையெனில், மக்களைக் காப்பதற்காக எதிர் நடவடிக்கைகளை எடுக்க நாம் தயங்கமாட்டோமென யாழ்.மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

படையினரது மனிதத்துக்கெதிரான கொடூரங்களிலிருந்து தமிழ் மக்களைக் காப்பதற்கு தற்காப்புத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்த நாம் அவற்றைக் கடந்த சில நாட்களாக நிறுத்தியுள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளாலும், சர்வதேச சமூகத்தாலும் முன்னெடுக்கப்படும் போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுக்கள் குறித்த நல்லெண்ண வெளிப்பாடாகவே எமது தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளோம்.

சுழிபுரத்திலும், இருபாலையிலும் படையினர்மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல்கள் படைத்தரப்பால் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட புனைவுகளாகும்.

ஆனால், அரசாங்கமோ, படைத்தரப்போ, தமிழ்த் தேசவிரோத ஒட்டுக்குழுக்களோ தமது கொடூரம் மிக்க சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், கடத்தல்கள், அச்சுறுத்தல்கள் முதலியவற்றைத் தணிக்கவோ அல்லது நிறுத்தவோ சிறிதளவேனும் தயாராகவில்லை. ஒருபுறம் பேச்சுக்களில் அக்கறை காட்டுவதுபோல் பசப்பிக்கொண்டு, அதேவேளையில் தமிழ் மக்களை மிரட்டும் நடவடிக்கைகள் தொடரவே செய்கின்றன.

இந்த இரட்டைத் தன்மையான நிலைப்பாடுகளை எடுத்து பின்னர் வஞ்சகமாகத் தமிழ் மக்களை ஏமாற்றுவதே கடந்த காலத்தில் சிங்களப் பேரினவாதத்தின் தந்திரோபாயமாக இருந்தது.

தேச விடுதலைப் போராட்டத்தின் ஊடாக புடம் போடப்பட்டு பலம் மிக்க தளம் கொண்டுள்ள தமிழ் மக்கள் இனியும் ஏமாற்றப்படுவதற்கில்லை. ஏமாற்ற முயல்வோரைத் துவம்சம் செய்துவிட்டு தமது வளம் மிக்க விடுதலை இலக்கை நோக்கி முன்னேறுதல் அரசாங்கத்தினது நயவஞ்சகப் போக்கு, தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதை பொங்கி எழும் மக்கள் படையாகிய நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

பேரினவாதத்தின் அட்டூழியங்களிலிருந்து தமிழ் மக்களைக் காப்பதையே எமது முழுமுதற் கடமையாக வரித்துக் கொண்டுள்ள நாம் பொறுமையின் விளிம்புக்கு வந்துள்ளோம்.

தமிழ்மக்களது இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் படைகளும், ஒட்டுக் குழுக்களும் தமிழ் மக்கள் மீதான விரோதச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் படையினரதும், ஒட்டுக்குழுக்களினதும் வன்முறை ஒடுக்குமுறைகளிலிருந்து எமது மக்களைக் காப்பதற்காக எதிர் நடவடிக்கைகளை எடுக்க நாம் தயங்கமாட்டோம் என்ற முன்னெச்சரிக்கையை விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரபல பாடசாலைகளுக்கான 5 ஆம் தர வெட்டுப் புள்ளிகள்!

கொழும்பு

2005 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை பிரபல தமிழ் மொழிமூலப் பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகளை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

இதற்கமைய ஆண்கள் பாடசாலைகளில் கொழும்பு றோயல் கல்லூரி 153 புள்ளி, கொழும்பு டி. எஸ். சேனநாயக்க கல்லூரி 140 புள்ளி, மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி 130 புள்ளி, திருகோணமலை ஆர்.கே.எம்.கோணேஸ்வரா கல்லூரி 129 புள்ளி, கொழும்பு இசிபதான கல்லூரி 126 புள்ளி, யாழ்ப்பா ணம் இந்துக் கல்லூரி 126, புள்ளி, கொழும்பு இந்துக் கல்லூரி 117 புள்ளி என வெட்டுப் புள்ளிகளை கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

மகளிர் கல்லூரிகளுக்கான வெட்டுப்புள்ளிகள் - கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரி 142 புள்ளி, கொழும்பு இராமநாதன் இந்துக் கல்லூரி 137 புள்ளி, மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரி 127 புள்ளி, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை 125 புள்ளி, கல்முனை மஃமூட் மகளிர் கல்லூரி 121 புள்ளி என வெட்டுப் புள்ளிகளை கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கலவன் பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகளாக மடவலை பசார் மதீனா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் 125 புள்ளி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி 124 புள்ளி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 122 புள்ளி, ஹபுகஸதலாவ அல்-மினாஜ் முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் 120 புள்ளிகளும் என 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவான வெட்டுப்புள்ளிகளை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது. (01)

# ரி.ஆர்.ஓ பணியாளர்களை விடுவிக்க கண்காணிப்புக்குழு உதவவேண்டும்!

## தொண்டர் நிறுவனங்கள் கோரிக்கை

கிளிநொச்சி

ஆயுத முனையில் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுதலைசெய்வதற்கு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அவசர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனக்கோரி நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி அரசசார்பற்ற இணையத்தின் ஏற்பாட்டில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், கிளிநொச்சி மாவட்ட போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் வதிவிடப்பிரதிநிதியிடம் இந்த மனுவைக் கையளித்தனர்.

இந்த மனுவில் -கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்க பயணம் செய்து கொண்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் ஆயுத முனையில் கடத்தப்பட்டனர்.

கடத்தியவர்கள் தங்களை கருணாகுழுவைச்சேர்ந்தவர்கள் என அறிமுகப்படுத்தியுள்ளனர். க.இரவீந்திரன், அ.சதீஸ்கரன், சு.சுஜேந்திரன், த.வசந்தராஜன், செல்வி த.பிரேமினி ஆகிய ஐவருமே கடத்தப்பட்டவர்களாவர்.

வெலிகந்த பொலிஸ் நிலையத்திலிருந்து 75 மீற்றர் தூரத்தில் வைத்து இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. அதே தினத்தில் கடமையின் நிமித்தம் WPPA- 3074 இலக்கமுடைய வாகனத்தில் பயணஞ்செய்து கொண்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் ஐவர் காணாமற்போயுள்ளனர்.

காசிநாதர் கணேசலிங்கம், செல்வி லோஜினி, செல்வி சதாலட்சுமி, செல்வி சிவமதி, த.தங்கராஜா ஆகியோரே காணாமற்போயுள்ளனர். இவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேயப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர் கள்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இலங்கை அரசில் பதிவு செய்யப்பட்ட அரசசார்பற்ற தொண்டு நிறுவனமாகும். அது இன, மத, மொழி வேறுபாடின்றி கைவிடப்பட்ட சிறுவர்களையும் முதியோர்களையும் இல்லங்களில் வைத்து பராமரித்துவருகிறது.

வறுமையாலும், போரினாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. பணியாளர்களுக்கு நேர்ந்த சம்பவம் மனிதநேயப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் மிகவும் அச்சுறுத்தலாக அமைகிறது.

எனவே, கடத்தப்பட்டும் காணாமல் போயுமுள்ள பத்து பணியாளர்களையும் உயிருடன் காப்பாற்ற உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அந்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது

# ஜெனிவா பேச்சுக்களுக்கான அரசதரப்புக் குழுவில் 10 பேர்!

கொழும்பு

ஜெனிவாவில் போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக நடைபெறவுள்ள பேச்சுக்களில் அரசாங்கத்தரப்பில் பத்துப்பேர் கொண்ட குழு நியமிக்கப் படவிருப்பதாக அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் அரசாங்கப்பிரதிநிதிகளின் பெயர்கள் இந்தவார இறுதிக்குள் வெளியிடப்படும் என்றும் இது பத்துப்பேரைக் கொண்ட குழுவாக இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் குழுவில் அமைச்சர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் மற்றும் சில சட்டத்தரணிகள் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அரச குழுவினரைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

ஜெனிவா பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தற்போது அரசாங்க சமாதான செயலகத்தினாலும் ஏனைய தரப்புக்களினாலும் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலை புலிகள் தயாரிக்கவில்லை என்றும் அது மக்களை திசைதிருப்ப கிளப்பிவிடப்பட்டுள்ள வதந்தி என்றும் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி நிரலை அரசாங்கம், நோர்வே மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியோர் கூட்டாக இணைந்தே தயாரிப்பார்கள். அதே நேரம் பேச்சுவார்த்தைகளை இம்மாதம் 21 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் நடத்தலாம் என்று விடுதலைப் புலிகள் யோசனையை முன் வைத்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த நிகழ்ச்சி நிரலுக்கு கல்விமான்களின் கருத்துக்கள் அறியப் பட்டுவருகின்றன என்றும் அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழுவில் இராணுவப் பிரிவைச் சேர்ந்த கேணல் ஜெயம் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அரசாங்கத் தரப்பிலும் இராணுவ அதிகாரி ஒருவரை இணைத்துக்கொள்வதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (01)

## இலங்கைக்கு...

ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிட முடியாது. இலங்கை அரசாங்கம் என்ன கோரிக்கைகளை முன்வைக்கிறது என்பதைப் பொறுத்தே உதவிகள் அமையவேண்டும்.

மருத்துவர்கள், செவிலியர்கள் அவர்களுக்குத் தேவையெனில் நாம் அனுப்பலாம். அதற்கு மேலான உதவிகள் எனின், அது குறித்து நாம் மேலதிகமாக யோசிக்கவேண்டும் என ஜெயலலிதா தெரிவித்தார்.

## வெலிக்கந்த...

கடுமையான உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து யாரும் எந்த பொலிஸ் நிலையத்திலும் புகார் செய்யவில்லை. இராணுவச் சோதனைச் சாவடிக்கு அப்பால் சுமார் 100 மீற்றர் தொலைவில் நடந்த இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக ஏன் மட்டக்களப்பு திரும்பி வந்து, அடுத்த நாள் வரை காத்திருந்து புகார் செய்ய வேண்டும் என்பதை எங்களால் புரிந்து கொள்ளஇயலவில்லை.

அவர்களுக்கு பொலிஸ் நிலையத்துக்குச் செல்வதில் பயம் என்றால் அவர்கள் ஒரு நீதிபதியிடம் சென்று புகார் செய்திருக்கலாம். ஆனால், 24 மணிநேரம் கழித்து புகார் செய்யப் பட்டுள்ளது.

எனவே, இதில் ஒன்றும் உண்மையில்லை. இது முற்றிலும் புனையப்பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது. அரசு தரப்பிலிருந்து அமைதிப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக இந்த மாதிரிச் சம்பவங்கள் நடக்கின்றன என்று சர்வதேச சமூகத்துக்குக் காண்பிக்க எடுக்கப்படும் முயற்சியாகவே தெரிகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசுடன் இணையவில்லை ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு!

கொழும்பு

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து தாம் விலகப்போவதில்லையென பேரா சிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்:-

நான் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினராகவும் அதன் நாடாளுமன்ற உறுப்பினராகவுமே இருக்கிறேன். கடந்த சில வாரங்களாக ஊடகங்களில் நான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொள்ளப்போவதாக செய்திகள் வெளியாகின. ஆனால் இது தவறான செய்திகளாகும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதான செயற்பாடுகளுக்கு உதவுமாறு என்னிடம் கோரியிருந்தார். எனது கட்சி தலைமைத்துவத்தின் தெளிவுபடுத்தலுக்கு அமைவாக அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாகவும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார். (01)

## தமிழ் கூட்டமைப்பு...

வரைக்கும் சபைக்கு உள்ளேயும், வெளியேயும் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது எனத் தெரிவித்தார்.

இவர்களை விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்வரும் நாட்களில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் எனவும் அவர் மேலும் எச்சரித்தார்.

இவர் உரையாற்றும்போது - குறுக்கிட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச - நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றுவதற்கு கட்சித் தலைவர்களுக்கு மாத்திரமே அனுமதியுள்ளதாகத் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர் - இதற்கு பிரதமரே எதிர்ப்புத் தெரிவிக்காத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இதையடுத்து - வடக்கு - கிழக்கில் இடம்பெறும் மனிதப் படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை அமர்விலிருந்து வெளியேறினர். (01)

## ஜெனிவா...

சமாதான செயலகம் தெரிவித்துள்ளது. ஆனால் தப்பிவந்தவர்கள் தொடர் பாக எமக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அவர்களைச் சந்திக்க நாம் ஆவலோடு இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கடத்தப்பட்டோரில்...

பேசினால் சுட்டுக்கொலை செய்வோம் என்று அச்சுறுத்தப்பட்டே அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

அதேவேளை, தப்பிவந்த பெண்களில் ஒருவர் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில்-

கண்களும், கைகளும் வாயும் கட்டப்பட்ட நிலையில் காட்டுப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டோம். அங்கு எம்மை புகைப்படம் எடுத்துக் கொண்ட ஆயுதக்குழுவினர் எங்கள் இருவரை அங்கிருந்து தப்பிச்செல்லுமாறும் தெரிவித்தனர். செய்தியாளர்களிடம் இது தொடர்பாகக் கதைத்தால் சுட்டுப்படுகொலை செய்வோம் என்றும் கூறி அனுப்பினர்.

அவர்களிடமிருந்து தப்பிய நிலையில் நாங்களாகவே எமது அலுவலகத்தை வந்தடைந்தோம். தம்மைக் கடத்திய ஆயுதக்குழுவினர் தமிழில் தான் தங்களோடு கதைத்ததாகவும் அவர் தெரிவித்தார்

இதனிடையே ஏனைய தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு அவுஸ்ரேலிய அரசாங்கத்தை வலியுறுத்தும் கையெழுத்து இயக்கம் அவுஸ்ரேலிய புனர்வாழ்வுக் கழகத்தினரால் தொடங்கப்பட்டுள்ளது.

இதனிடையே தப்பி வந்த பெண்களிடமும் முதலாவதாக ஐவர் கடத்தப்பட்டபோது அந்த வாகனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஏனையவர்களிடமும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் வாக்கு மூலங்களைப் பெற்றுவருவதாக கண்காணிப்புக்குழு தகவல்கள் தெரிவித்தன.

## நாணயமாற்று வீதம்

| நாணயம் | கொள் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | ரூ 101.62 | ரூ 102.66 |
| ஸ்ரேலிங் பவுண் | ரூ 180.24 | ரூ 183.14 |
| யூரோ | ரூ 122.93 | ரூ 125.29 |
| சுவிஸ் பிராங் | ரூ 78.84 | ரூ 80.88 |
| அவுஸ்ரேலிய டொலர் | ரூ 76.23 | ரூ 78.20 |
| ஜப்பானிய யென் | ரூ 00.87 | ரூ 00.89 |

மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களின் சுட்டிய விலைகள்

| | |
|---|---|
| பஹ்ரேன் டினாரின் சுட்டிய விலை | ரூ 271.04 |
| குவைத் டினாரின் சுட்டிய விலை | ரூ 349.71 |
| ஓமான் றியாலின் சுட்டிய விலை | ரூ 265.36 |
| சவுதி றியாலின் சுட்டிய விலை | ரூ 27.24 |
| ஐக்கிய அரபு ராச்சிய திர்ஹாமின் சுட்டிய விலை | ரூ 27.81 |

(01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.02.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.